Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்.

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை

எக்ஸ்போ எயார்
வான் வெளியில்
உங்கள் நண்பன்...

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 23 (15.03.2004) திங்கட்கிழமை இதழ் :167

### ஜனாதிபதி சந்திரிகா - பிரதமர் ரணில் ஆகியோருடன்

# தற்போதைய அரசியல் நிலை குறித்து சொல்ஹெய்ம் இன்று முக்கிய பேச்சு!

(கொழும்பு)

**தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் முக்கியமான பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார்.**

தனித்தனியாக நடைபெறவுள்ள இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து தனது ஒரு வார கால இலங்கை விஜயத்தை எரிக்சொல்ஹெய்ம் முடித்துக்கொள்ளவிருப்பதாக தெரியவருகிறது. நாளை இவர் ஒஸ்லோவுக்குப் பயணத்தை மேற்கொள்வார்.

இன்றைய சந்திப்புக்களின்போது - சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பான கருத்துக்களை அறிந்துகொள்வது, பொதுத் தேர்தலுக்குப் பின்னரான நிலைமை, விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதியாகவிருந்த கருணாவின் முடிவினால் ஏற்பட்ட நெருக்கடிநிலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தனித்தனியாகக் கலந்தாலோசிப்பார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்த எரிக் சொல்ஹெய்ம், கருணாவின் நிலைப்பாட்டினால் ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் நிலைகுறித்தும் ஆராய்ந்திருந்தார்.

கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் மற்றும் கிழக்குப் பகுதிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட தளபதிகளுடனும் சொல்ஹெய்ம் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அத்துடன், கருணாவைச் சந்திப்பதற்கு எரிக்சொல்ஹெய்ம் மறுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜாதிகஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

நான்கு பௌத்த பிக்குகள் உள்ளிட்ட பதினைந்து ஹெல உறுமய ஆதரவாளர்கள் பண்டாரகமவில் வைத்து இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று பண்டாரகம நகரில் இடம்பெறவிருந்த பௌத்த பேரணி ஒன்றுக்காக ஜாதிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச மருத்துவர் வேலை நிறுத்தம் தொடர்கிறது

அரசாங்க மருத்துவர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தம் குறித்து அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்படாததை அடுத்து தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம்- மருத்துவர்களுக்கு இடையிலான சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கடந்தவாரம் இறுதி முதல் மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் இன்றும் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, இவர்களுடைய சம்பள முரண்பாடுகள் குறித்து நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியுடன் நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றபோது மூன்று வாரத்துக்குள் சம்பள

# மேலதிகாரி மீது ஆத்திரம் கொண்ட இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூடு!

### மெய்ப்பாதுகாவலர் பலி; யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று அதிகாலை காவலரண் ஒன்றில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் சுட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் இடம்பெற்றது. இதில் ஜி.பி. சுஜீவபண்டார (வயது 22) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

காவற்கடமையில் ஈடுபடும் இராணுவத்தினரை மேற்பார்வை செய்துகொண்டிருந்த லெப டினன்ட்தர இராணுவ அதிகாரி ஒருவர் கோவில்

யிலிருந்த சிப்பாய் ஒருவர் மது போதையில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதை அவதானித்தார்.

இதையடுத்து, இராணுவ அதிகாரி நித்திரையிலிருந்த சிப்பாயின் முகத்தில் நீரை ஊற்றி எழுப்பினார். விழித்துக்கொண்ட இராணுவச் சிப்பாய் மேலதிகாரியை அவமானப்படுத்தும் வகையில் பேசியதுடன், இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, சிப்பாய் தனது துப்பாக்கியால் இராணுவ அதிகாரியை நோக்கிச் சுட்டார்.

அவ்வேளை அவருக்கு அருகில் நின்ற அவரது மெய்ப்பாதுகாவலரான சுஜீவ பண்டார தடுக்கமுற்பட்டபோது அவரின்மீது துப்

இவரது உடல் மேலதிக வைத்திய பரிசோதனைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சிப்பாய் தற்போது தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து யாழ்.கோவில் வீதி மற்றும் வைத்தியசாலை வீதிப்பகுதி ஆகியவற்றில் நேற்று அதிகாலை முழுவதும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முலலைவச் சந்தியிலிருந்து கண்டி வீதி வரையும், கோவில் வீதியின் நாவலர் சந்தி முதல் கண்டி வீதி வரையான வீதியெங்கும்

பொதுத் தேர்தலுக்குப் பின்னரான நிலைமை,

ஹெய்ம், கருணாவின் நிலைப்பாட்டினால்

தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச மருத்துவர் வேலை நிறுத்தம் தொடர்கிறது

அரசாங்க மருத்துவர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தம் குறித்து அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்படாததை அடுத்து தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம்- மருத்துவர்களுக்கு இடையிலான சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கடந்தவாரம் இறுதி முதல் மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் இன்றும் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, இவர்களுடைய சம்பள முரண்பாடுகள் குறித்து நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியுடன் நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றபோது மூன்று வாரத்துக்குள் சம்பள முரண்பாடுகள் நீக்கப்படும் என்றும் அதுவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மேலதிகாரி மீது ஆத்திரம் கொண்ட இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூடு!

## மெய்ப்பாதுகாவலர் பலி; யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று அதிகாலை காவலரண் ஒன்றில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் சுட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் இடம்பெற்றது. இதில் ஜி.பி. சுஜீவபண்டார (வயது 22) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

காவற்கடமையில் ஈடுபடும் இராணுவத்தினரை மேற்பார்வை செய்துகொண்டிருந்த லெபடினன்ட்தர இராணுவ அதிகாரி ஒருவர் கோவில் வீதியும், வைத்தியசாலை வீதியும்இணையும் சந்திப்பகுதியில் உள்ள காவலரணில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் மது போதையில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதை அவதானித்தார்.

இதையடுத்து, இராணுவ அதிகாரி நித்திரையிலிருந்த சிப்பாயின் முகத்தில் நீரை ஊற்றி எழுப்பினார். விழித்துக்கொண்ட இராணுவச் சிப்பாய் மேலதிகாரியை அவமானப்படுத்தும் வகையில் பேசியதுடன், இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, சிப்பாய் தனது துப்பாக்கியால் இராணுவ அதிகாரியை நோக்கிச் சுட்டார்.

அவ்வேளை அவருக்கு அருகில் நின்ற அவரது மெய்ப்பாதுகாவலரான சுஜீவ பண்டார தடுக்கமுற்பட்டபோது அவரின்மீது துப்பாக்கிச்சூடு பட்டதில் அவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இவரது உடல் மேலதிக வைத்திய பரிசோதனைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சிப்பாய் தற்போது தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து யாழ்.கோவில் வீதி மற்றும் வைத்தியசாலை வீதிப்பகுதி ஆகியவற்றில் நேற்று அதிகாலை முழுவதும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முலவைச் சந்தியிலிருந்து கண்டி வீதி வரையும், கோவில் வீதியின் நாவலர் சந்தி முதல் கண்டி வீதி வரையான வீதியெங்கும் இராணுவத்தினர், இராணுவப் பொலிஸார்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நான்காவது தொகுதி படையினர் விசேட பயிற்சியை முடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் படையினரின் விசேட பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் நான்காவது கட்டப் பயிற்சியை முடித்து வெளியேறிய நிகழ்வு நேற்றுமுன்தினம் பலாலியில் இடம்பெற்றது.

பலாலி விமானத்தள ஓடுபாதையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தரைவழியாகவும், நீர் வழியாகவும், வான் வழியாகவும் சென்று எதிரிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான பயிற்சிகளே இந்தப் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், எதிரி இலக்குகள் மீது சிறு சிறு குழுக்களாக சென்று தாக்குதல் நடத்துவது தொடர்பான பயிற்சிகளும் இந்தப் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, மூன்று தொகுதிப் படையினர் இந்த விசேட பயிற்சியைப் பெற்று வெளியேறியுள்ளனர். நான்காவது கட்டத்தில் நேற்றுமுன்தினம் ஐந்து அதிகாரிகளும், 94 படையினரும் விசேட பயிற்சிகளைப் பெற்று வெளியேறினர்.

விசேட பயிற்சிகளைப் பெற்ற படையினருக்கான பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் விசேட பயிற்சி பெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எந்தச் சூழலிலும் யுத்தநிறுத்தத்தை எமது அரசாங்கம் பாதுகாக்கும்!

## பிரதமர் ரணில் திருமலையில் உரை

(திருகோணமலை)

நாம் பல இக்கட்டான சூழலை கடந்த காலங்க்ளில் சந்தித்தோம். எனினும் எந்த சூழ்நிலையிலும், யுத்த நிறுத்தத்தை எமது அரசு பாதுகாக்கும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்-

சமாதான பேச்சுக்களிலும் இடையூறு ஏற்படாது. அதனைத் தொடந்து பேணுவதற்கு நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.


சமாதான பேச்சு தடைப்பட்டதற்கு காரணம் ஜனாதிபதி சந்திரிகா எமது பொறுப்பில் இருந்த மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதேயாகும். இந்தநாட்டில் சமாதானம் நிலைபெற எமது அரசாங்கம் தொடர்ந்து பாடுபடும்.

கடந்த முறை தேர்தலின் போதும் நான்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கொள்கைதனில் விண்மதியாய் திகழ்ந்தவர்க்கு எமது அஞ்சலிகள்



நாட்டுப்பற்றாளர்
உயர்திரு. கந்தசாமி ஈஸ்வரச்சந்திரன்
(ஈஸ்வரன்)

(ஆங்கிலப் பேராசான் - ஆங்கிலக் கல்லூரி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
முதுநிலைமொழிபெயர்ப்பாளர்,
முன்னைநாள் ஏரிக்கரை நாளிதழ்
உதவிப் பத்திரிகை ஆசிரியர்.
BA.Dip.in social Service
சமூக சேவையில் கலைமாணிப் பட்டம்.)

எம் இனிய வழிகாட்டியே
உங்கள் இழப்பினை
எண்ணி வாடுகின்றோம்.
கற்ற ஆங்கில வித்தைதனை
கைமருந்தாய் - எமக்களித்து
கல்விப் பசி நோய் தீர்த்தவரே
பகட்டிற்கும் பதவிக்கும் பணிந்திடாது
கொள்கைதனில் விண்மதியாய்
திகழ்ந்தவரே - இன்று நாட்டுப்பற்றாளனாய்
எமக்குள் கலந்திட்டவரே.
ஆற்றமுடியாத துயர்தனில்
நொந்துருகும் உறவுகளோடு
இணைந்துமே அமைதிக்காய்
வேண்டி நிற்கின்றோம்.

| பிறந்த நாள் | சாவடைந்த நாள் |
|---|---|
| 22.07.1935 | 13.03.2004 |

போராளிகள்,
ஆங்கிலக் கல்லூரி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி/2318)

## மட்டுவில் வடக்கில் மருத்துவ முகாம்

மட்டுவில் வடக்கு ஸ்ரீ கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில், பிரதி வெள்ளிக்கிழமைகளில் மருத்துவசேவை நடைபெற்று வருகின்றது.

கியூமெடிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இந்த மருத்துவசேவையால் மட்டுவில் வடக்கு, கிழக்குப் பகுதி, சந்திரபுரம், சரசாலை தெற்கு, கிராம மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

நோயாளர் ஒருவருக்கு சேவையின் அடிப்படையில், 10 ரூபா வீதம் அறவிடப்படுவதாக நிலையத்தின் தலைவர் க.பேரின்பநாதன் தெரிவித்தார். (24)

## பிரசாரக் கூட்டமும் இசை நிகழ்வும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டமும், தமிழீழ இசைக் கலைஞர்களின் இசை நிகழ்வும் இன்று மாலை 7 மணிக்கு சுன்னாகம் சிவன் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

இதில் கூட்டமைப்பு வேட்பாளர்கள், விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினரது உரைகளும் இடம் பெறும். தொடர்ந்து தமிழீழ இசைக் கலைஞர்களின் எழுச்சிப்பாடல் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.


ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு, சோனியா அகர்வல்,
நாசர் நடித்த
கோவில்



10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)
செவ்வாய் முதல்
மௌனம் பேசியதே
(சி-2263)

நிறஞ்சனாஸ் சங்கானை
தனுஷ், அபர்ணா,
கருணாஸ் நடித்த
புதுக்கோட்டையிலிருந்து சரவணன்



காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
STY KIDS - 2



# யாழ் மண்ணில் முதன் முறையாக வட்டுக்கோட்டையில்





மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட
மாபெரும் துடுப்பெடுத்தாட்டம் ராஜன்
கதிர்காமர் வெற்றிக்கேடயத்திற்கான
வடக்கின் பொன் அணிகள் மோதல்
மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்

## மோதவிருக்கும் அணிகள்

## யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் - புனித பத்திரிசியார் கல்லூரி

இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானம்
காலம்:- 18.03.2004 (வியாழக்கிழமை)
காலை 9 மணி தொடக்கம்

இவ் மாபெரும் துடுப்பெடுத்தாட்ட நிகழ்வில் தங்கள் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்பவற்றின் விளம்பரங்களை மைதானத்தில மற்றும் ஊடகங்களில் விளம்பரம்செய்திட தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :-

★ யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்
அல்லது

★ T.K.TOURIST INN
பலாலி றோட்,
கந்தர்மடச்சந்தி (அரசடி வீதி)
யாழ்ப்பாணம்.

★ தொலைபேசி இலக்கங்கள்:- 077 - 6143541
021 - 222 - 5680

விண்ணப்ப முடிவு திகதி:- 16.03.2004 (செவ்வாய்க்கிழமை)

(சி-2317)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# தேர்தலில் போட்டியிடும் பிக்குகளுக்கு அமரபுரபீட மகாநாயக்கர்கள் ஆசி!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் போட்டியிடும் பௌத்த பிக்குகளுக்கு அமரபுரபீடத்தின் மகாநாயக்கர் வண. வெலிகம ஞானரத்ன தேரோ ஆசி வழங்கினார்.

பொரளையில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட - வண.கங்கொடவில சோம தேரோவின் மூன்றாவதுமாத நினைவாக இடம்பெற்ற போதி பூஜையில் கலந்து கொண்டபோதே தேர்தலில் போட்டியிடும் பிக்குகளுக்கு அமரபுர பீடாதிபதி ஆசி வழங்கினார்.

தேர்தலில் போட்டியிடும் பிக்குகள் நாடாளுமன்றத்தில் நாட்டுக்காக, சமயத்துக்காக, மொழிககாக, பண்பாட்டுக்காக வாதிடவேண்டும் என்பதற்காகவே ஆசி வழங்குகின்றேன் என அமரபுர பீடாதிபதி தெரிவித்தார். நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நாட்டை கங்கொடவில சோமதேரோவின் பாதையில் நடந்துசென்று மீட்பதற்கு அனைவரும் பாடுபடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதால் பௌத்தமத பீடங்கள் அழிவடையும்!

## அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் எச்சரிக்கை

பௌத்த பிக்குகள் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது பௌத்த பீடங்களை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்ல வழிகோலும் என்று மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சங்க சம்மேளனக் கூட்டத்திலேயே மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்கர்களால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

'பௌத்த பிக்குகள் பிளவுபடுவதைத் தடுப்போம்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற மாநாட்டில், பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்க்கவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டது. தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வதென்பது எமது கடமையல்ல.

பௌத்த பிக்குகள் ஒவ்வொருவரும் கிராமங்கள் தோறும் சென்று இனப்பிரச்சினை தொடர்பாக தெளிவுபடுத்தினால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் உடனடித்தீர்வு காணமுடியும்.

இவ்வாறான நிலையில் தேர்தலில் போட்டியிடுவதால் பௌத்த பீடம் பிளவுபடுமே தவிர, வேறொன்றும் நடைபெறப்போவதில்லை என்றும் மகாநாயக்கர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடன் பேச்சு தொடரும்!

## ஜனாதிபதி சந்திரிகா உறுதிமொழி



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப்பீடம் ஏறியதும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து, தகுந்த முறையில் முன்னெடுத்து செல்லப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

வர்த்தக சமூக தொழில்சார் நிபுணர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்ல தற்போது இணக்கம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நாம் ஒரு போதும் மாறவில்லை. மாகாணசபை அல்லது பிராந்திய மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதே பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடாகும்.

மக்கள் விடுதலை முன்னணி நிர்வாகத்தைப் பரவலாக்கம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. அவர்களும் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதிகாரப்பரவலாக்கத்தில் முன்னோக்கிச் செல்வதற்கான பலவிடயங்கள் அடங்கியுள்ளன. எனினும் நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் எமது கூட்டமைப்பு ஆட்சிபடம் ஏறியபின்னர் இனப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடுவது குறித்து நாம் தற்போது ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம். ஏனையோரையும் பேச்சுவார்த்தைக்கு அழைப்போம். எனவே விடுதலைப்புலிகளும் ஏனைய தரப்பினரை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை எனக் குறை கூறமாட்டார்கள்.

தற்போதுள்ள பேச்சுவார்த்தைகள்போல எமது பேச்சுவார்த்தை நீண்டதாக இருக்காது. மீண்டும் யுத்தம் ஏற்பட ஐககிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருபோதும் இடமளிக்காது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார வீழ்ச்சி குறித்து

# சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் - இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி குறித்து எச்சரிக்கை செயதிருப்பதுடன், பாராட்டும் தெரிவித்திருக்கிறது.

இருபதாண்டுகால உள்நாட்டுப் போருக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் மீண்டுகொண்டிருக்கிறது. இருந்தாலும், வட்டிவீதத்தை உயர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும்.

இலங்கையின் அரசியல் நிலைமைகள் மோசமடைந்ததால் நிதிக்கொள்கையை மாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் இலங்கை அரசாங்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிடுவதற்காக நாட்டின் வட்டிவீதத்தை இரண்டே முக்கால் சதவீதத்தால் குறைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தனியார்துறை ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்கு விடுமுறை!

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

தனியார்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு நான்கு மணிநேர விடுமுறையை வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

1982 ஆம் ஆண்டின் 122 ஆவது இலக்க நாடாளுமன்றச் சட்டத்தின் பிரகாரமே - இந்தக் கோரிக்கை தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்டது.

தேர்தலில் வாக்களிப்பதற்காக நான்கு மணிநேர லீவு வழங்க முன்கூட்டியே, தாம் பணிபுரியும் நிறுவனங்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் தேர்தல் ஆணையாளர் தனியார்துறை ஊழியர்களைக் கேட்டுள்ளார். அத்துடன், இந்த லீவுக்காக ஊழியர்களின் சம்பளம் வெட்டப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் உரிமைகளைக்காக்க வேண்டுமாயின் ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும்!

## காத்தான்குடியில் ஹிஸ்புல்லா உரை

(கொழும்பு)

எமது உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமானால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே வாக்களிக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

காத்தான்குடியில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை மீண்டும் கைப்பற்றுகின்ற தினமாகப் பிரகடனப்படுத்தவேண்டும்.

முஸ்லிம் சமுகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க அஷ்ரப்பினால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் ஒரே இலக்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதாக இருக்கின்றது எனபதாக ஹக்கீம் கூறினால், அவர் முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் அபிலாசைகளை விற்பனை செய்கின்றார் என்றே அர்த்தமாகின்றது.

இரண்டு வருட ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் மௌனிகளாகவே இருந்துள்ளனர். எமது உரிமைகள் பாதுகாகக்கப்படவேண்டுமானால் முஸ்லிம்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே வாக்களிக்கவேண்டும் என ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (01)

# அரச வைத்தியர்களின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியின் வாக்குறுதிகளை ஏற்காமல் அரச வைத்திய அதிகாரிகள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

நிதியமைச்சர் சொக்ஸி எழுத்துமூலமான வாக்குறுதி ஒன்றினை வேலைநிறுத்தப் போராடடத்தில் ஈடுபட்டிருக்கும் வைத்தியர்களுக்கு வழங்கியிருந்தார். ஆனால் அந்த உறுதிப்பாட்டை ஏறறுக்கொள்ளமுடியாதென தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்- தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தினை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

வைத்தியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாடளாவியரீதியில் நோயாளர்கள் பெரிதும் இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர்

அமைச்சரவை தமது போராட்டத்திற்கு சரியான தீர்வைத்தரவேண்டும் என்று கோரியே அரச வைத்தியர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புனரமைப்பு பணிகள் தொடரும்!

## ஐ.தே.மு.வேட்பாளர் நூர்தீன் மசூர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கடந்த காலங்களில் ஈடுபட்டதாக வன்னி மாவட்ட் ஐக்கிய தேசிய முன்னணியின் முதன்மை வேட்பாளர் நூர்தீன் மசூர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசிய முன்ணியின் அலுவலகம் ஒனறைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமது கட்சியின் வேலைத்திட்டங்களுக்கு அதிகளவில் கிடைக்கவிருந்த வெளிநாட்டு உதவிகள் அரசியல் நெருக்கடியால் காலதாமதமடைந்துள்ளது.

வன்னி மாவட்டத்தின் புனர்வாழ்வுக்கென ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட அமைப்பினூடாகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதேபோன்று ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால், மேலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (01)

# இரு பிரதான கட்சிகளிடையேயும் எந்த வேறுபாடும் கிடையாது!

## விக்கிரமபாகு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் எந்த வேறுபாடும் கிடையாதென புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

இரத்மலானையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இரு கட்சிகளுமே உலக வங்கிப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் வழிகாட்டலில்தான் தமது பொருளாதாரக் கொள்கைகளை அமைக்கின்றன. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றினூடாக நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கவேண்டும் என விக்கிரமபாகு கருணாரத்ன தெரி வித்தார்.

## லஞ்ச ஊழல் ஆணையாளராக விக்னராஜாவின் பெயர் சிபாரிசு

லஞ்ச ஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் நிரந்தர ஆணையாளராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கே.விக்னராஜாவின் பெயரை அரசியல் அமைப்பு சபை சிபார்சு செய்துள்ளது. கடந்த மாதம் 14 ஆம் திகதி கூடிய அரசியலமைப்பு சபை - ஜனாதிபதிக்கு இவரின் பெயரைச் சிபார்சு செய்துள்ளது. ஜனாதிபதி இந்தச் சிபார்சை ஏற்றுக்கொள்வாரானால், அவர் மீண்டும் அந்தச்சிபார்சை ஏற்றுக் கொள்வதற்கான பரிந்துரையை அரசியலமைப்பு சபைக்கு தெரிவிக்க வேண்டும் பின்னர் விக்னராஜா லஞ்ச ஆணைக்குழுவின் நிரந்தர ஆணையாளராக நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வாழைச்சேனை பிரசாரக் கூட்டத்தை எதிர்த்து வீதிகளில் ரயர் எரிப்பு!

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வாழைச்சேனை நகரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடை பெற்றுக்கொண்டிருந்தது. இதன்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன், வீதித் தடைகளைப் போட்டு பொதுமக்கள் போக்குவரத்தையும் தடைசெய்தனர்.

இதன்போது அந்தப் பகுதிகளுக்கு விசேட இராணுவப்பிரிவினர் அழைக்கப்பட்டு வீதித்தடைகளை அகற்றி, தடைசெய்யப்பட்ட போக்குவரத்துக்கு அனுமதித்தனர்.

இதேவேளை காத்தான்குடியில் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றபோது இவ்வாறான சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (01)

## கிரிக்கெட் போட்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

துரையப்பா ஸ்ரேடியம் மற்றும் குருநகர் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் இந்தப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறுமென விளையாட்டுத்துறை அதிகாரி ரமணன் தெரிவித்தார். (72)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக இங்கிலாந்து அணி 339 ஓட்டங்கள்!

மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்டின் 3 ஆம் நாளான நேற்று இங்கிலாந்து அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 339 ஓட்டங்களைப் பெற்றது

முன்னதாக 2 ஆம் நாள் ஆட்ட முடிவின் போது இங்கிலாந்து அணி 3 விக்கட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய 3 ஆம் நாள் ஆட்டத்தில் இவ்வணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 339 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்ஸில் பெற்ற 311 ஓடட்டங்களுடன் ஒப்பிடுகையில் 28 ஓட்டடங்களால் முன்னிலை வகிக்கிறது.

2 ஆம் நாள் ஆட்டமுடிவின் போது 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நசார் ஹுசைன் நேற்று 58 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இது அவரது 31 ஆவது டெஸ்ட் அரைச் சதமாகும். சகலதுறை ஆட்டக்காரரான பிளின்டொப் 50 பந்துகளில் விரைவாக 46 ஓட்டங்களை எடுத்தார். இதில் 6 பவுண்டரிகளும் அடங்கும்.

இங்கிலாந்து அணி சார்பாக புட்சர் 58, ஹுசைன் 58, பிளின்ரொப் 46, றீட் 20, கைல்ஸ் 27 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ரீனோ பெஸ்ற், இங்கிலாந்து



ரீனோ பெஸ்ற்

அணியின் கிரஹாம் தோர்ப்பின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கட்டில் தனது முதலாவது விக்கட்டைக் கைப்பற்றினார். பெஸ்ட் - 3, எட்வேட்ஸ் 3, சான்போட், கைன்ஸ், சர்வான் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸை ஆடிக்கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து அணிகளின்

# ஹமில்ரன் முதல் டெஸ்ட்; சமநிலையில் முடிவடைந்தது!



ஜக்கலிஸ்

(ஹமில்ரன்)

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஹமில்ரனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிவுற்றது.

விளையாட்டு

நான்காம் நாள் ஆட்டமுடிவின் போது 3 விக்கெட்டுக்களை இழந்த தென்னாபிரிக்கா 134 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இறுதி நாளான நேற்று அவ்வணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் ஜக்கலிஸ் ஆட்டமிழக்காமல் 312 பந்துகளை எதிர்கொண்டு 19 பவுண்டரிகள் அடங்கலாகப் பெற்ற 150 ஓட்டங்களே அவ்வணியை இந்த ஓட்ட எண்ணிக்கைக்கு இட்டுச் சென்றது.

1936 தொடக்கம் 1938 வரையான காலப் பகுதிக்குள் சேர் டொனால்ட் பிரட்மன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஓட்டங்களைக் குவித்தது போல தற்போது ஜக்கலிஸ் ஓட்டங்களைக் குவித்து வருகின்றார் எனவும், சேர் டொன் பிரட்மனுடன் கலிஸ் மட்டுமே தற்போது ஒப்பிடப்படக்கூடியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்க அணி சார்பில் இரண்டாவது இனிங்ஸில் கிப்ஸ் 47, மக்கன்சி 52, கலிஸ், கிறிஸ்ரன் இருவரும் ஓட்டமிழக்காமல் முறையே 150, 34 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸை ஆடிய நியூஸிலாந்து, ஒரு விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது. இதனால் இரு அணிகளுக்குமிடையில் இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது.


நியூஸிலாந்தின் இரண்டாவ்து இனிங்ஸில் பப்ஸ் 12, மக்கலம் ஸ்ரைஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 19, 3 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்கா தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 459 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்லில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது.

நியூஸிலாந்து தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 509 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் ஆட்டம் நிறைவடைந்தது.

# எனது வாழ்க்கையில் மிகப் பெரிய ஓவர்!

## இந்திய பந்துவீச்சாளர் நெஹ்ரா



(கராச்சி)

இந்திய அணி பரபரப்பான ஆட்டத்தில் பாகிஸ்தானை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியால் திடீர் கதாநாயகனாக ரசிகர்கள் மத்தியில் உருவெடுத்திருப்பவர் நெஹ்ரா. அவர்தான் கடைசி ஓவரில் பந்து வீசினார். அதில் 6 பந்துகளில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலை பாகிஸ்தானுக்கு இருந்தது. கடைசி பந்தில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவை இருந்தது. நெஹ்ரா அபாரமாக பந்துவீசி கடைசி பந்தில் மொயின்கான் விக்கெட்டை கைப்பற்றினார்.

கடைசி ஓவர் குறித்து நெஹ்ரா கூறுகையில், எனது வாழ்க்கையில் மிகப்பெரிய ஓவர் அதுதான்.

அதிக நெருக்கடியிலும் சிறப்பாக பந்துவீசினேன். மொயின் கானுக்கு எதிராக சரியான இடத்தில் நேர்த்தியாகப் பந்துவீச்சு அமைந்தது என்றார்.

## இந்திய - பாகிஸ்தான் அணிகளின் உயர்ந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை!

இந்தியா - பாகிஸ்தான் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தின்போது இரு அணிகளும் சேர்ந்து மொத்தம் 693 ஓட்டங்களை குவித்தன. 61 பவுண்டரிகளும், 12 சிக்ஸர்களும் இதில் அடங்கும்.

இதில் இந்திய வீரர்கள் 34 பவுண்டரிகளும், 4 சிக்ஸர்களும் அடித்தனர். பாகிஸ்தான் தரப்பில் 27 பவுண்டரிகளும், 8 சிக்ஸர்களும் அடிக்கப்பட்டது.

மேலும் பாகிஸ்தான் இந்தியாவுக்கு உதிரிகளாக 38 ஓட்டங்களையும். இந்தியா பாகிஸ்தானுக்கு 19 ஓட்டங்களையும் கொடுத்துள்ளது.

இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று எதிராக குவித்த அதிக ஓட்டங்களும் இதுதான்.

## சதுரங்கப் போட்டி; மகாஜன மாணவர் முதலிடத்தில்!

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த 15, 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் வலயமட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (72)

# அரசியல் கூட்டங்களில் பங்கேற்க அரசியல் வாதிகளுக்குத் தடை!

(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறைகள் அமுலுக்கு வந்துவிட்டதால் அரசியல் தலைவர்களை வைத்து அரசு சார்பிலான விழாக்கள், கூட்டங்கள், நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சாரங்கி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக சாரங்கி அனுப்பியுள்ள உத்தரவில் -

மாவட்ட வளர்ச்சிக் கழகக்கூட்டம், ஜில்லாக் கூட்டம், பஞ்சாயத்துக் கூட்டம் ஆகிய வற்றுக்கு அரசியல் தலைவர்கள், அரசியல் வாதிகளை அழைக்கக்கூடாது.

இந்தக் கூட்டங்களுக்கு மூத்த அதிகாரிகள் மட்டுமே தலைமை தாங்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் சம்பந்தப்பட்டவர்கள் கூட்டங்களுக்கு வரக் கூடாது.

வரட்சி போன்ற முக்கிய பிரச்சினைகளை விவாதிக்க மட்டுமே இந்தக் கூட்டங்கள் கூட்டப்படவேண்டும். நிதி ஒதுக்கீடு, புதிய திட்டங்களை அறிவிப்பது ஆகியவை நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## மாணவரை குறிவைக்கும் சுப்பிரமணியம் சுவாமி!

(மதுரை)

மதுரையிலுள்ள பல்வேறு கல்லூரிகளுக்கும் சென்று பொருளாதாரம் குறித்த போதனைகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார் ஜனதாக் கட்சி சார்பில் மதுரையில் சுயேட்சையாக போட்டியிடும் சுப்பிரமணியம் சுவாமி.

மதுரை தொகுதியில் சுப்பிரமணியம் சுவாமி தனித்துப் போட்டியிடுகிறார். அவரது பிரசாரம் வித்தியாசமான முறையில் ஆரம்பமாகி விட்டது.

பெரிய கட்சிகளைப் போல் ஆரவாரம், ஆர்ப்பாட்டம், ஆடம்பரம் இல்லாமல் மிக எளிமையாக பிராசாரம் செய்து வருகிறார் சுவாமி.

அத்தோடு பல்வேறு கல்லூரிகளுக்கும் சென்று மாணவர்களுக்கு பொருளாதாரம் குறித்து விளக்கமளிக்கிறார். ஆனால் அதில் அவர் அரசியலைக் கலக்கவில்லை. இருப்பினும் மாணவர்கள் அவருடைய உரையை ஆர்வத்துடன் கவனிக்கின்றனர். சுவாமிக்கு மாணவர்களிடையே நல்ல மரியாதை இருப்பது பெரிய பெரிய கட்சிகளைக்கூட பயமுறுத்தி வருகிறது.

மாணவர்களின் வாக்குகள் சுவாமிக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற நிலை உள்ளது.

# வெளிநாட்டவர் ஆள அனுமதிக்கக் கூடாது!

## சோனியா மீது வருண் காந்தி பாய்ச்சல்!

(வதோரா)

வெளிநாட்டவர் நாட்டை ஆள அனுமதிக்க முடியாதென்று சோனியா காந்தியை வருண் காந்தி மறைமுகமாகத் தாக்கிப் பேசினார்.

பாரதீய ஜனதாக் கட்சியில் சமீபத்தில் சேர்ந்த மேனகா காந்தியின் மகன் வருண் காந்தி நேற்றுமுன்தினம் குஜராத் மாநிலத்தில் பிரசாரம் செய்ய வதோதரா சென்றடைந்தார். அங்கு அவர் நிருபர்களிடம் கூறியதாவது -

பாரதீய ஜனதா கட்சியின் மேலிட கட்டளைப்படி நான் குஜராத் மாநிலத்தில் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்வேன். நான் கிரிக்கெட் போட்டியைக் காண பாகிஸ்தான் செல்லவில்லை.

வாஜ்பாய் தலைமையில் மீண்டும் நல்லாட்சி அமையவேண்டும். அதற்காக நானும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளேன் என்பதை பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு தேர்தல் பிரசாரம் தான் முக்கியம்.

நாட்டின் உயர் பதவிக்கு வெளிநாட்டவர் வர அனுமதிக்கக்கூடாது. வெளிநாட்டவர் நாட்டை ஆளவும் ஆசைப்படக்கூடாது. நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அமோக வெற்றிபெறும். வாஜ்பாய் மீண்டும் பிரதமர் ஆவர் என அவர் கூறினார்.

# அ.தி.மு.க. வெற்றிபெறவேண்டுமென விரல்களை துண்டித்த தொண்டர்கள்!

அ.தி.மு.கவின் தேர்தல் வெற்றிக்காக இருவர் தமது விரல்களைத் துண்டித்துக் கொண்டனர்.

சமீபத்தில் சேலத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ரத்னம் என்பவர் தனது கையின் மூன்று விரல்களை அ.தி.மு.கவின் வெற்றிக்காக கோவில் வைத்துத் துண்டித்துக் கொண்டார். இந்தச் சம்பவத்தின் பரபரப்பு மறைவதற்குள் திருநெல்வேலியில் மற்றொரு அ.தி.மு.க. தொண்டர் தனது இரண்டு விரல்களைத் துண்டித்துக் கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டம் வெள்ளியூர் அருகேயுள்ள சமத்துவபுரத்தைச் சேர்ந்தவர் கணேசன். சமையல்காரராக வேலைபார்த்து வருகிறார். கடந்த சனிக்கிழமை பிற்பகல் சக்தியமமன் கோவிலுக்குச் சென்ற கணேசன், அங்கு அரிவாளினால் தனது இரண்டு விரல்களைத் துண்டித்தார்.

விரல்களை வெட்டுவதற்கு முன்னர் அவர் எழுதிய கடிதத்தில், அ.தி.மு.க. மற்றும் திருச்செந்தூர் அ.தி.மு.க. வேட்பாளர் தாமோதரன் வெற்றிக்காக இந்தத் தியாகத்தைச் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாகாகோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் கணேசன் அனுமதிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கணேசனை பார்த்து நலம் விசாரித்தனர்.

# போர்தந்த ஆறாத வடுக்களை விளையாட்டுநிகழ்வுகள் அகற்றுகின்றன

## புனர்வாழ்வுக்கழக முகாமையாளர் தேவானந்தா

எங்களுடைய மூதாதையர்களிடமிருந்து - நல்லபல தேட்டங்களை, கலைகளை, பண்பாடுகளை, விளையாட்டு நிகழ்வுகளை எல்லாம் இன்று நாம் தொலைத்தவர்களாக, இழந்தவர்களாக இருக்கின்றோம். காலமாற்றமும், நடைபெற்றபோர் மற்றும் இடப்பெயர்வு தந்த ஆறாத மனவடுக்களும் எம்மிடமிருந்து இவற்றை அப்புறப்படுத்திவிட்டன.

தற்போதைய சமாதான சூழலில் பல்வேறுபட்ட உதவி நிறுவனங்களும் எமதுமண்ணில் பல அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றன. ஆயினும் கட்டடங்கள் உருவாக்குவதை விட, மனிதர்களை உருவாக்கவேண்டும். மனிதர்களை மனிதர்களாக வாழ வைக்கவேண்டும்.

அதுதான் எமது இருப்பை உலகுக்கு வெளிக்காட்டும். இதற்காகவே நாம் பெண்களின் ஆற்றல்களையும், திறமைகளையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் முகமாக எம்மால் செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 20 கிராமங்களில் இத்தகைய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றோம்.

இவ்வாறு மட்டுவில் கமலாசினி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 'வேரடிமண்' பாரம்பரிய விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு, அறிமுகவுரை நிகழ்த்திய தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமுகாமையாளர் தேவானந்தா தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் - பெண்கள் உற்சாகமாகவும், ஆர்வத்துடனும் இந்த நிகழ்வில் பங்கேற்பதைக்காண மிக்க மகிழ்ச்சியாகவுள்ளது. அவர்கள்மூலம் மனித உறவுகள், பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட்டு வளர்க்கப் படல்வேண்டும் என அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

சரசாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சத்தியேஸ்வரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக சரசாலை சரஸ்வதி வித்தியாலய அதிபர் ஜெயமணியும், சிறப்பு விருந்தினர்களாக மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் பேரின்பநாதனும், தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகளும், 'கிறிஸ்டியன் எய்ட்' அமைப்பின் அதிகாரிகளும், யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறையைச்சேர்ந்த சிவநாதனும் கலந்துகொண்டனர். (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### தெளிகருவி வழங்கல்

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் மட்டுவில் வடக்கு ஜே/313 கிராம அலுவலர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்குப் பொதுப் பாவனைக்கான தெளிகருவி வழங்கலும், தொழில் முறைப்பயிற்சியும் - நாளை பிற்பகல் 2 மணிக்கு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்துப் பொதுமக்களையும் கலந்து, பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

### கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படுகிறன

பருத்தித்துறை நகரில் திரியும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை நகரசபையின் சுகாதாரப்பிரிவினர் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து, அவற்றிற்கு நஞ்சூட்டப்பட்டு வருகிறது.

வளர்ப்பு நாய்களை வீடுகளில் கட்டி, பாதுகாப்பாக வளர்க்குமாறு சுகாதாரப்பிரிவினர் அறிவுறுத்தி வருகின்றனர். (17)

### சாயி சேவா நிலையத்தில் குழாய்க்கிணறு

(வண்ணை)

வட.பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழு - பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் முப்பது குழாய்க் கிணறுகளை அமைக்கவுள்ளது. அதற்கான இடங்கள் தற்போது தெரிவு செய்யப்படுவதாகவும், விரைவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் இணைப்புக்குழு தெரிவித்துள்ளது. (111)

### அலங்காரங்கள் எரிப்பு

அரியாலை நெடுங்குளம் பகுதியில் எதிர்வரும் பொதுத்தேர் தலையொட்டி கட்டப்பட்டிருந்த அலங்காரக் கொடிகள் இனந்தெரியாத குழுக்களால் அறுத்து, தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நெடுங்குளம் வீதியில் உள்ள அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றுக்கு அண்மையில் இருந்த இந்த அலங்காரக்கொடிகளே அறுக்கப்பட்டு, தீயிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (111)

### பஸ் நிலையப் பகுதியில்

# மக்கள் நடமாட்ட நேரத்தில் சுத்திகரிப்பு பணி நடைபெறுகிறது

யாழ்.பஸ்நிலையப் பகுதியில் - சுத்திகரிப்பில் ஈடுபடும் யாழ்.மாநகரசபை ஊழியர்கள், பஸ்நிலையப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த பின்னர் சுத்திகரிப்பில் ஈடுபடுவதனால், பயணிகள்பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

காலை 7.30 மணிக்குப் பின்பே சுத்திகரிப்பில் ஈடுபடுவதனால், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பயணிகள் சுத்திகரிப்பினால் ஏற்படும் - தூசுகள், புழுதிகள் காரணமாக உடைகள் மற்றும் உடமைகள் அசுத்தமடைவதுடன், தூசு தொடர்பான உபாதைகளுக்கும் உள்ளாகும்நிலை ஏற்படுகின்றது. பஸ் நிலையப் பகுதி மற்றும் பஸ் தரிப்பிடங்கள், பயணிகள் தங்குமிடங்கள் போன்றவற்றில் இவ்வாறான செயல்கள்இடம்பெறுவதனால் பயணிகள் பெரும்விசனமடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# முற்றவெளிப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் தற்போது கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டு வருகின்றது.

யாழ்.நகரிலுள்ள உணவகங்களிலிருந்து எடுத்துவருப்படும் - கழிவு இலைகள், பொலித்தீன்பைகள் போன்றனவும் மற்றும் உடைந்த கண்ணாடிகள் போன்றனவும் இந்தப் பகுதியில் கொட்டப்படுகின்றன.

கழிவு இலைகள் குப்பைகள் போன்றவற்றை உடனுக்குடன் எரியூட்டப்படுகின்றனபோதும், கடந்த இருவாரங்களுக்கு மேலாக கண்ணாடித்துண்டங்கள் அந்தப் பகுதியிலேயே குவித்துவிடப்பட்டுள்ளதுடன், முற்றவெளிப்பகுதிப் பிரதேசம் எங்கும் பொலித்தீன்பைகள் காற்றினால் சிதறுண்டு, பரவிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(113)





வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பெண்கள் தின விழாவை வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை மேலுள்ள படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களை மற்றைய படத்திலும் காணலாம்.

# வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இரண்டாம் கட்ட விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இந்த நிகழ்வு - எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சென்றோக் சனசமூகநிலையத்திலும், 11 மணிக்கு றெக்கிளமேசன் சனசமூகநிலையத்திலும், ஜூபிலி மகப்பேற்று நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

26 ஆம் திகதி குருநகர் சனசமூகநிலையத்திலும், ஆ.சு. நிலையம் சுவாமியார் வீதியிலும் விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

ஏப்ரல் 7 ஆம் திகதி பாசையூர் சிறுவர் பூங்காவிலும், ஈச்சமோட்டை சனசமூகநிலையத்திலும், சந்தன மாதா கோயில் அருகாமையிலும், மறுநாள் 8 ஆம் திகதி கொய்யாத் தோட்டம் சனசமூகநிலையத்திலும், கிறீன் பீல்ட் சனசமூகநிலையத்திலும், சென்மேரிஸ் தேவாலயத்திலும், 15 ஆம் திகதி கொழும்புத் துறை கிழக்கு சனசமூகநிலையத்திலும், நல்லூர்ப்பகுதிக்கான சமூகநிலையத்திலும், அரசடி சமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக - யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மரியதாசர் தெரிவித்தார்.




பெயர் : வரதன். வதுஷா,
முகவரி : 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:----------------

---------------------------

முகவரி:----------------------

---------------------------

பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------

பெற்றோர் ஒப்பம்

# செல்லக்கிளி அம்மான் நினைவுத்தூபி இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தபால்கட்டைச்சந்தியில் அமைந்துள்ள - செல்லக்கிளி அம்மான் நினைவுத்தூபி கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அந்தப் பகுதி மக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - இந்தப் பகுதியில் இரவு பகலாக இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் நிற்கின்றனர் என்றும், நேற்று நள்ளிரவு செல்லக்கிளி அம்மான் நினைவுத்தூபி படம் அடித்து நொறுக்கப்பட்டதுடன், ஒயில் ஊற்றி தூபி சேதமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மனித நாகரீகமற்ற செயற்பாட்டை - திருநெல்வேலி வர்த்தகர்கள் பலர் கண்டித்துள்ளதுடன், அந்தப் பகுதி மக்கள் பெரும் வேதனையடைந்துளளனர். (205)

### பருத்தித்துறை பிரதேச செயலக

# புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா - எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலகத்திற்கான மாடிக் கட்டடம் கட்டுவதற்கான முதற்கட்ட நிதியாக 30 இலட்சம் ரூபா மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலகம் கட்டுவதற்கான காணியை பொதுமக்களால் வழங்கப்பட்ட 12 இலட்சம் ரூபா செலவில் இலங்கை போக்குவரத்துச்சபை பருத்தித்துறை கிளைக்கு அருகாமையில் ஒரு வருடத்திற்கு முன் கொள்வனவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# சமுர்த்தி நிவாரணமுத்திரை வழங்குவதற்கு ஏற்பாடு

(மீசாலை)

யாழ்.மாவட்டத்தில் அனைத்து பகுதிகளுக்குமான சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மிக துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

இந்த முத்திரைகள் சமுர்த்தி வங்கியில் அங்கத்தவர்களாக உள்ளவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இதன்படி, சமுர்த்தி வங்கியில் கணக்குகள் வைத்திருப்பவர்களின் பெயர், குடும்ப எண்ணிக்கை, வருமானம் என்பவற்றின் விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் கேட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி - யாழ். மாவட்டத்திலுள்ள சகலபகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களும், தமது கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்படும் குடும்ப விபரங்களை உடனடியாக திரட்டி அனுப்பமாறு கேட்கப்பட்டுள்ளனர். (25,44)





# கனகசபையின் வீடு



சிறுகதை

இணுவையூர் உத்திரன்



'அண்ணன் இருந்தென்ன ராசாவே,
அவன் ஆனைகட்டி வாழ்ந்தென்ன ராசாவே,
தம்பி இருந்தென்ன ராசாவே,
தனவந்தனாய் வாழ்ந்தென்ன ராசாவே,
மாளிகை கட்டிவைத்த ராசாவே - என்னைவிட்டு
மாண்டு போனியே ராசாவே ஐயோ'

தன் தலையில் அடித்து தலைவிரி கோலமாக அழுது கொண்டிருந்தாள் பொன்னம்மா. அருகில் கனகசபை பிணமாகக் கிடந்தார். முற்றத்திலே அயலவர், உற்றார் உறவினர்கள் ஓடிஆடி வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

கால்மாட்டில் மூத்தவன் முருகேசனும், இளையவன் சுப்பிரமணியும் இடிந்துபோய் உட்காந்திருந்தார்கள்.

சின்னத்துரையர் வெற்றிலை சுறுட்டுத் தட்டத்தை எடுத்துக்கொண்டு முன்பக்கமாகப் போனார். இறந்துபோன கனகசபையின் தம்பிதான் சின்னத்துரையர். இன்று செத்தவீட்டுச் செலவு முழுவதும் அவருடைய பொறுப்புத்தான்.

'ஒரு நோய்நொடிகூட வந்ததில்லை. இப்படி திடீரெண்டு உயிர் போறதெண்டால் பாவம் மனுசன் ஏங்கிப் போச்சப்பா' என்று வருந்தினார் நடேசண்ணை. 'பின்னை இருக்காதே மனுசன் மணிமணியாய் கோர்த்து சிறுகச் சிறுக சேமித்துத்தானே உந்த வீட்டைக் கட்டினது. பாவம் ஒரேயடியாய் ஏங்கி இதயம் நிண்டு போச்சுதாம்' என்றார் ஆறுமுகம்.

எடேதம்பி முருகேசா... எழும்பி தோய்ஞ்சிட்டு வேட்டியைக் கட்டிக் கொண்டுவா குருக்கள் வந்திட்டாரெல்லே!' என்று மூத்தவன் முருகேசனிடம் கூறி, அவனைத் துரிதப்படுத்தினார் சின்னத்துரை. ஆனால், முருகேசனால் அந்த இடத்தைவிட்டு நகர முடியவில்லை. ஏதோ இவை எல்லாம் கனவாய் இருந்துவிடக் கூடாதா? எதையுமே நினைத்துப் பார்க்க முடியவில்லை. 'கடவுளே...!' ஐயாவை நினைக்க அவனுக்குப் பாவமாய் இருந்தது. ஐயா. இந்த வீட்டைக் கட்டுறதுக்குப் பட்ட கஷ்டம் அவனுக்குத்தான் தெரியும். அவனுடைய கண்களில் இருந்து கண்ணீராகப் பெருகிக்கொண்டிருந்தது.

இந்தக் காலத்திலை கமம் செய்து, குடும்பத்தைப் பார்த்து, மிச்சம் பிடிச்சு, சேமிச்சு, ஒரு வீடு கட்டுறதெண்டால் எவ்வளவு சிரமமான ஒரு விடயம், அதுகும் சீமெந்து மண், ஓடு, கம்பி, மரம், எடுக்கமுடியாத பொருளாதாரத் தடைகளாலை சூழப்பட்ட, ஒரு யுத்த பிரதேசத்திலை பாவம் கனகசபையார், தோட்டத்திலை சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் மாடாய் உழைத்தார். மருந்தில்லை, உரம் இல்லை, மெசினுக்கு ஒரு பாட்ஸ் எடுக்கேலாது. இதற்குள்ளாலும் தோட்டம் செய்ததோடு கொஞ்சம் காசையும் சேர்த்து வைத்திருந்தார். இதற்குக் காரணம் எப்படியாவது ஒரு கல்வீடு கட்டிப்போடவேணும் என்பது அவரது சிறுவயது முதல் இருந்துவந்த ஆசை, எங்கடை பிள்ளைகுட்டிகள் கல்வீட்டிலை வாழவேணும். என்ற வைராக்கியத்தால் கடந்த ஐப்பசி மாதம் வீட்டுக்குப் பத்திரிப்பும் போட்டுக்கொண்டார்.

இரண்டு அறை, ஒரு கோல், ஒரு கிச்சின் கொண்ட சிறிய வீட்டுக்குத்தான் கனகசபையார் திட்டமிட்டார். ஆனால், மகள் தனக்கு அறை ஒன்று வேண்டும் என்று அடம்பிடித்தாள், 'முன்பக்கம் கூட்டோடு ஒரு சயிற்அறையும் கட்டவேணும்' என்று மூத்தவன் முருகேசன் கூறினான்.

'அதுகள் பாவம் இவ்வளவு காலம் ஓலைவீட்டுக்கை இருந்து படிச்சு நல்லாய் கஷ்டப்பட்டு விட்டுதுகள். இனிமேலாவது வசதியாய் வாழ்ந்திடவேணும்' என்று பொன்னம்மாவும் சப்போட் பண்ணியபடியால், முன்பக்கம் கொஞ்சம் நீட்டப்பட்டது.

வீட்டுக்கு அஸ்திவாரம் வெட்டுவதில் இருந்து, கல்லு தூக்கிப் போடுகின்ற வேலை வரை கனகசபையும் சேர்ந்து செய்துகொள்வார். காலையில் தோட்டத்துக்குப் போய் வந்தால் பிறகு முழுவதும் வீட்டு வேலைதான். சீமெந்தைக்கூட கூலி கொடுத்து வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை இரண்டு இரண்டாக சயிக்கிளில்தான் கட்டிக்கொண்டு வருவார். வீடு கட்டும் வேலை ஓரளவு பூர்த்தியாகி இருந்தது. கோப்புசம் மட்டும் உயர்ந்த நிலையில் அவருடைய காசும் கரைந்து போயிருந்தது. 'இஞ்சேரப்பா இனி என்ன செய்வம்' என்று பொன்னம்மாவிடம் கேட்டபோது, அவள் தனது கொடி தவிர்ந்த இரட்டைப்பட்டுச் சங்கிலி, இரண்டு சோடிக் காப்பு, ஒரு கல்லட்டியல் எல்லாவற்றையுமே கழற்றிக் கொடுத்து வித்துக் கட்டுங்கோ என்றாள். அவர் பொன்னம்மாவை கல்யாணம் கட்டின காலத்தில், ஆசையாசையாய் செய்து போட்ட நகைகள் இவை. 'பரவாயில்லை, பிள்ளைகளும் உழைக்கத் தொடங்கினால் எல்லாக் கடன்தணியும், இல்லாமல் போகும்தானே? நீங்கள் யோசியாதைங்கோ, பிறகு நகைகளை செய்து கொள்ளலாம் 'என்று பொன்னம்மா கூறியபோது, அவருடைய கண்கள் கூடக் கலங்கித்தான்விட்டன. அந்த நகைகளைக் கொண்டு மிகுதி வேலையைத் தொடங்கினார்.

கோப்புசத்துக்கு மரம் ஏற்றி சிலாகை தைத்து சொலிக்கிராம் அடித்த போது, முக்கால் வேலையும் முடிந்திருந்தது. அத்தோடு மீண்டும் காசு முடிந்திருந்தது. மீண்டும் பணத் தட்டுப்பாடு எழுந்தபோது, தனது பிள்ளைகளுக்குக் கூடத்தெரியாமல் காணி உறுதியைக் கையில் எடுத்துக் கொண்டார் கனகசபை யார். நான்கு நாட்களாக ஓடாத ஓட்டம்ஓடி அறுபதாயிரம் ரூபாவுக்கு காணியை ஈடுவைத்துக்கொண்டார்.

ஓடு வாங்குவதற்காக ஓடாத ஓட் டம் இல்லை. ஒரு ஓடு ஐம்பது ரூபாய் வரை விற்பனையாகியது. என்ன செய்வது, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு ஓடு வாங்கினார். அடுத்து கதவு, ஜன்னல்கள் செய்யவேண்டி இருந்தது. பின் வளவிற்குள் நின்ற ஒரு வேம்பைத் தறித்து பலகையாக்கி, கதவு, நிலைகள் செய்யப்பட்டன. 'இந்தமுறை பொயிலை உணர்த்தேலாது, காசுத்தேவை இருப்பதால் பச்சையாகவே விற்றுப் போடவேணும்' என்று பொன்னம்மாவிடம் கனகசபை யார் கூறியபோது, பொன்னம்மாவுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. 'எப்படியும் உலர்த்தினால் கொஞ்சம் கூடத்தேறும். ஆனாலும், என்ன செய்வது அந்த பொயிலை வித்த காசைக் கொண்டுதான் கதவு, ஜன்னல் செய்த கூலிப்பணமும் கொடுத்து வேறு அங்கேயிருந்த சில்லறைக் கடன்களும் கொடுத்துத் தீர்க்கவேணும்', இப்போது நிலத்துக்கு காறைபோட்டு கதவுகளும் பொருத்தப்பட்டதோடு வீடு முழுமையாக கம்பீரமாகக் காட்சியளித்தது.

இறுதியாக இருந்த வெள்ளை அடிக்கும் வேலை, அதை கனகசபையாரின் மூன்று பிள்ளைகளும் சேர்ந்து செய்து கொண்டார்கள். ஒரு சனிக்கிழமை வெள்ளைஅடித்து முடிந்ததோடு, சரியாக வீட்டு வேலைகள் ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவு பெற்றிருந்தது.

'குடிபூரலை சிம்பிளாகச் செய்யவேணும் அயலட்டைகளுக்கும், சொந்தக்காரருக்கும்... சொன்னால் போதும்' என்றார் கனகசபை. 'நான் என்ரை சிநேகிதப் பெடியளுக்குச் சொல்லுவன்' என்றான் 'முருகேசன்' 'நானும்தான்' என்றான் சுப்பிரமணி, சரிசரி அவதிப்படாதையுங்கோ, பூசை நடக்க முன்னர் சன்னதம் கொள்ளக் கூடாது. நான் சாத்திரியார் வீட்டை போட்டுவாறன். தைமாதம் நல்ல நாள் இருக்கு' என்று கூறிக்கொண்டு துவாயை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டார் கனகசபை. அன்றுதான் அந்த அனர்த்தம் நடந்தது.

திடீரென வானில் தோன்றிய இரண்டு விமானங்களில் ஒன்று சரேலென்று குத்துண்ண வந்து ஒரு குண்டை அவர்களின் வீட்டுக்கு மேலே வீசிவிட்டுப் பறந்து கொண்டிருந்தது. இதைப் போல வேறு பல இடங்களிலும் குண்டுகள் வீசப்பட்டன. சுமார் பத்துநிமிடங்களின் பின்னர் எல்லாம் ஓய்ந்திருந்தன. சாத்திரியார் வீட்டுக்குப் போன கனகசபையார் ஓடோடி வந்தார். வீடு ஒரே புகைமண்டலமாய்த் தெரிந்தது. சுவர், கதவு, ஓடு எல்லாமே நான்கு புறமும் வெடித்துச்சிதறிக் கிடந்தன. கனகசபையார் தன் இரு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு விம்மினார். அப்படியே நிலத்தில் விழுந்தார். நெஞ்சிலே அடித்துக்கொண்டு அழுதார்.

'கடவுளே வீட்டுக்கு மேலே விழுந்த குண்டு என்ரை தலையிலை விழுந்திருக்கக்கூடாதா?' என்று கதறினார். அப்படியே மயங்கிப் போனார். ஐயா! ஐயா! என்று முருகேசன் கதறினான், அயலவர்கள் எல்லோரும் ஓடிவந்தார்கள் அவரைத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினார்கள். ஆனாலும், அவரின் உயிர் அவர் நேசித்த அந்த மண்ணிலேயே பிரிந்திருந்தது.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி...'

இப்போ சுண்ணம் இடிக்கிற கிரியையும் நிறைவு பெற்றுக் கொண்டிருந்தது. எல்லா இடத்திலும் மனித முகங்கள். எல்லா முகங்களிலும் சோகம். அன்றைய வானொலி, தொலைக் காட்சிகளில் எல்லாம் வடபகுதியில் பல பயங்கரவாதிகளின் முகாம்களை விமானப்படை குண்டு வீசி நிர்மூலமாக்கி இருந் தது. இதில் பல பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டு இருக்கலாம். என்றும் நம்பப்படுகின்றது.' என்று செய்தி வெளியிடப்பட்டு இருந்தன.

முருகேசனின் கண்களிலிருந்து ஆறாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவன்தான் கொள்ளி போடப்போகின்ற பிள்ளை புது வேட்டிகட்டி, பூணூலும் போட்டு இருந்தான். அருகில் சுப்பிரமணி.

வாய்க்கரிசி போட்டுமுடிந்து, பெட்டியை மூட எத்தனிக்கும் போது எல்லோரும் பெட்டியில் அடித்துக் கதறினார்கள்.

'பொறுங்கோ பொறுங்கோ' என்று கதறியபடி பின்காணிப் பக்கமாக சிலர் அவன் பின்னாலே ஓடினார்கள். குண்டு வீச்சினால் உடைந்து சிதறிக்கிடந்த வீட்டுக்கு நடுவே ஓடிவந்த முருகேசன் தன் இரண்டு கைகளாலும் அந்த மண்தூளை அள்ளினான். மீண்டும் ஓடிவந்து அதைத் தந்தையின் காலடியில், அந்தப் பெட்டிக்குள் போட்டான்.

'ஐயா உங்களின்ரை இலட்சியம் இண்டைக்கு மண்ணாய்ப் போய்க்கிடக்கு, ஆனால்... ஆனால்... இந்த இடத்திலை நான் பெரிய ஒரு வீடு கட்டுவன். உங்களின்ரை கனவை நிறைவேற்றுவன்' என்று கத்திக் கதறினான் முருகேசன்.

ஆனால், தம்பி சுப்பிரமணியோ ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக நின்றான். அந்த அமைதிக்குப் பின்னால் பெரிய ஒரு பூகம்பமே அடங்கியிருந்தது. சுப்பிரமணி எதையுமே மறக்கக் கூடிய ஆள் இல்லை. எதையுமே மன்னிக்கக் கூடிய ஆள் இல்லை. அவனது குடும்பம் பாதிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவனிடம் இருக்கக்கூடிய வேட்கை அவனிடம் நிறைய இருந்தது.

பெற்ற காயங்களுக்கும் வடுக்களுக்கும், சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்' அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான். என்ன செய்யவேண்டும் என்று, தனது மௌனத்தால் சத்தியம் செய்துகொண்டான்.

இப்போது அந்த உழைப்பாளியின் உடல் ஆயிரம் அழுகுரல்கள் மத்தியில் அமைதியாக சுடுகாட்டை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்தது. ✦

நன்றி ஆனந்தவிகடன்

பொது ... யாழ்ப்பாணம்

# நூல் அரங்கு




ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது, அந்த இரண்டு மனிதனுக்கும் இடையே ஒரு உறவுநிலை தோன்றுகின்றது. இத்தகைய ஒரு உறவுநிலை மனிதர்களிடையே ஒற்றுமையையும், பலத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்றன.

மனிதன் தன்னுடைய துன்பங்களையும், தனக்கு ஏற்பட்ட கொடுமைகளையும் இன்னொருவரிடம் பகிர்ந்து கொள்கின்றான். அவ்வாறு பகிர்ந்து கொள்வதன்மூலம் தனது கவலைகளை மறந்து போய்விடுகின்றான்.

மனிதன் தமக்கிடையே உறவுகளை வளர்த்துக் கொள்வதன் மூலமாக, இன்பமாகவும், நிம்மதியாகவும், திருப்தியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இவ்வாறு ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் ஏற்படுத்திய உறவு சில எல்லைகளுக்குள் நின்றுவிடாமல், அவை மேலும் வளர்க்கப்படுவது ஆரோக்கியமான சமுதாயத்தின் உருவாக்கத்திற்கு வழிகோலும் நடவடிக்கையாகும்.

இனம், நாடு, மொழி வரையறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் இத்தகைய உறவுகள் வளர்க்கப்பட வேண்டியது இன்றியமையாத தேவையாகும்.

நம் நாட்டில் உள்ள இலக்கியங்கள், வெளிநாட்டில் மொழிபெயர்க்கப்படவேண்டும். வெளிநாட்டில் உள்ள இலக்கியங்கள் நம்நாட்டின் மொழியில் மாற்றியமைக்கப்படவேண்டும். இத்தகைய ஒரு சிந்தனையை புரட்சிக் கவிஞரான பாரதியார் சொல்லி வைத்துள்ளார்.

ஒரு நாட்டின் இலக்கியத்தை, எமது நாட்டு மொழியிலும், எமது இலக்கியத்தை வேறு மொழியிலும், மொழிபெயர்ப்புச் செய்வதற்கு எமது நாட்டு மொழியை அறிந்துவைத்திருப்பது மட்டும் போதாது. இன்னொரு நாட்டு மொழியையும் அறிந்துவைத்திருக்க வேண்டியது அவசியமானது.

இந்த வகையில் மனோன்மணி சண்முகதாஸ் தமிழர் யப்பானியர்வாழ்வில் தைப்பொங்கல் என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

யப்பானிய மொழியிலும், தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றவராகிய மனோன்மணி சண்முகதாஸ் இந்த நூலைச் சிறந்தமுறையில் ஆக்கியுள்ளார்.

யப்பான் நாட்டில் இருக்கும் கக்சுயின் பல்கலைக் கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றிவருபவர் மனோன்மணி சண்முகதாஸ் என்பது அறிந்த விடயமாகும்.

'தமிழர் யப்பானிய வாழ்வில் தைப்பொங்கல்' என்ற இந்த நூலில் இரண்டு விடயங்கள் இடம்பெற்றுள்ளன. 'தமிழர் ஜப்பானிய வாழ்வில் தைப்பொங்கல்' என்பது ஒரு விடயம். தமிழ்மொழியும், ஜப்பானிய மொழியும் ஒப்பீட்டாய்வு வரலாறு வளர்ச்சி நிலைக்கும், என்பது மற்றைய விடயமாகும்.

பழந்தமிழர் பண்பாடு எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாகவும், சங்கச் செய்யுள்களில் எவ்வாறான தமிழர் பண்பாடுகள் கூறப்படுகின்றன என்பதையும், பொங்கல் என்ற சொல்லுக்குரிய விளக்கம், தைப் பொங்கல் என்ற சொல்லுக்குரிய விளக்கத்தினையும், இந்த இரு சொற்களுக்கும், ஜப்பானிய சொல்லுக்குமிடையே உள்ள ஒற்றுமையையும், தமிழர் தைப் பொங்கல் ஜப்பானில் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகின்ற முறையையும், தனது நூலின் முதலாவது விடயமாக மனோன்மணி சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

மற்றைய விடயமாக தமிழ்மொழி, ஜப்பானிய மொழியோடு ஒப்பிட்டு, எத்தகைய ஆய்வுகள் வெளிவந்தன. இந்த விடயம் தொடர்பான ஆய்வுப் பதிவுகள் எவ்வாறு நடைபெற்றன. அதன் வளர்ச்சி நிலை எவ்வாறு இருந்தது. என்பது தொடர்பாகவும், இந்த விடயம் தொடர்பான வெளியீடுகளும் குறிப்பிடப்படுகின்றது.

தமிழ்மொழிக்கும், யப்பானிய மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டா? என்ற கேள்வி இன்று பலரது உள்ளத்திலும் காணப்படுகின்றது. இத்தகைய ஒரு கேள்விக்கு எம்மாலியன்ற விடையைத் தமிழில் தர எண்ணியதன் விளைவே, இந்தநூல் என்று நூலின் ஆசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

பூ.நகுலன்

# பெயர்!

நான் வேலை செய்கின்ற அலுவலகத்தில் இருந்து வேலை முடிந்து. மாலை 6 மணிக்கு வீட்டுக்குச் செல்வேன். ஏனோ தெரியவில்லை. எனக்கு முன்னே ஒருத்தி ஒவ்வொரு நாளும் சென்றுகொண்டிருப்பாள்.

ஒருநாள் என்னைப் பார்த்துக் கேட்டாள், நீ ஏன்? எனக்குப் பின்னாலே வருகின்றாய் என்று. நான் உடனே, நீ ஏன் எனக்கு முன்னாலே போகின்றாய் என் றதும், எவ்வித பதிலும் சொல்லாமல் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, சைக்கிளை எடுத்துக்கொண்டு, எனக்கு முன்னே சென்றாள்.

அடுத்த நாள் எனக்குப் பின்னே வந்துகொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பதில் தான் உணர்ந்திருப்பால் போலும். அதற்கு அடுத்த நாள் என்னோடு வலிய வந்து கதைத்தாள். எங்கே இருக்கின்றீர்கள். உங்களின் பெயர் என்ன? என்று கேட்க, நான் ஒன்றும் விடாமல் சொல்லிவிட்டேன். அன்றிலிருந்து என னோடு நட்பாகி னாள்.

ஒவ்வொருநாளும் நானும் அவளும் வீதியால் கதைத்துக் கொண்டுபோவோம். அவளுக்குத் தெரிந்தவர்கள் யாரும் வந்தால் கதைக்காமல் மௌனமாகப் போவாள். எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் வந்தாலும் நான் அவளுடன் கதைத்துக் கொண்டுதான் போவேன். இப்படியாகப் பல நாட்கள் நட்புத் தொடர்ந்தது.

அடுத்த நாள் நான் அவளிடம் உங்களின் பெயர் என்ன? எங்கே இருக்கின்றீர்கள்? என்று நான் கேட்டதும் ஒன்றுமே சொல்லாமல் மௌனமாக சென்றுகொண்டிருந்தாள். ஏன் கதைக்க மாட்டீரா என்று கேட்க நீங்கள் ஆண்பிள்ளை சொல்லிவிட்டியல், நான் பெண்பிள்ளை எப்படிச் சொல்வது என்று மறுத்துவிட்டாள். சரி நட்புக்கெல்லாம் பெயர், ஊர் ஒன்றும் தேவையில்லை. என்று சொல்லிவிட்டுச்சென்றேன்.

ஒருகிழமை கழிந்தது. ஒரு நாள் பக்கத்து ஊரின் வழியே சென்று கொண்டிருந்தபோது? ஒரு மதவில் இருந்தும், சைக்கிளில் நின்றும் கதைத்துக்கொண்டிருக்கும் பெடியள் பலரில் என்னைக்காட்டி ஒருவன் சொன்னான்டேய்! இவன்தாண்டா சாலினியின் காதலன் என்று சொன்னதும் எல்லோரும் என்னைப் பார்த்தார்கள்.

தலையினைக் குனிந்து பெடியலைத் தாண்டிச் சென்றேன். ஆனால் அவளின் பெயரினை அறியக்கூடியதாகவும் இருந்தது. அதேவேளை, எனது பெயரினை இழக்கக் கூடியதாகவும் இருந்தது

-செல்வா

# பாரதியார் கவிதை

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?"
போடலாம்.
மண்ணிலும் வானந்தானே நிரம்பியிருக்கின்றது?
மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா?
உடலைக் கட்டு, உயிரைக் கட்டலாம்.
உயிரைக் கட்டு, உள்ளத்தைக் கட்டலாம்.
உள்ளத்தைக் கட்டு, சக்தியைக் கட்டலாம்.
அந்தந்தச் சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை.
என்முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது.
அதற்கு ஒரு வடிவம், ஓரளவு, ஒரு நியமம் ஏற்பட்டிருக்கின்றது.
இந்த நியமத்தை, அழியாதபடி, சக்தி பின்னே நின்று
காத்துக் கொண்டிருக்கின்றாள்.
மனித ஜாதி இருக்குமளவும் இதே தலையணை அழிவெய்யாதபடி அதனை அடிக்கடிப் புதுப்பித்துக் கொண்டிருந்தால் அந்த "வடிவத்திலே"
சக்தி நீடித்து நிற்கும்.
புதுப்பிக்காவட்டால் அவ் 'வடிவம்' மாறும். அழுக்குத் தலையணை, ஓட்டைத் தலையணை, பழைய தலையணை - அதிலுள்ள பஞ்சையெடுத்துப் புதிய மெத்தையில் போடு. மேலுறையைக் கந்தையென்று வெளியே ஏறி. அந்த "வடிவம்" அழிந்துவிட்டது.
வடிவத்தைக் காத்தால்
சக்தியைக் காக்கலாம்,
அதாவது சக்தியை, அந்த வடிவ்த்திலே காக்கலாம். வடிவம் மாறினாலும் சக்தி மாறுவதில்லை.
எங்கும், எதனிலும், எப்போதும் எல்லாவிதத் தொழில் வடிவத் தைக் காப்பது நன்று,
வடிவத்தைக் காப்பது நன்று.
சக்தியின் பொருட்டால் சக்தியைப் போற்றுதல் நன்று.
வடிவத்தைக் காக்குமாறு,
ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை இழந்து விடுவார்கள்.

# மழை!



வரம் வேண்டி
வரவழைக்கப்பட்டு,
காத்திருந்து
வாசல் வரைவந்தும்
நிலம் மட்டும்
அடிக்கடி காயும்!

வீட்டின் முகடும்,
பிடிக்கும் குடையும்,
மரத்தின் கிளையும்,
பிடிக்காத மழைக்கும்,
நனைக்க
வேண்டும் போலிருக்கும்
முழுவதையும்!

சிலவேளைகளில்
கோபத்துடன்
கூடுதலாக எதிர்பார்த்த
விவசாயி!

கடதாசிக் கப்பல்
செய்து, ஓடவிட்டு
விளையாடும்,
குழந்தைகளுக்காக மட்டும்
முற்றத்தில் வெள்ளம்!

இது
குடைகள் வாழ்ந்த
காலப்பகுதி!

நீந்திப் பழக்கவும்,
குத்துக்கரணம் அடித்து
நீந்தவும்,
சுழியோடவும்
இளைஞர்களுக்காக
ஊர்க்குழத்துத் தண்ணீர்
நிரம்பியது!

பாடசாலை மாணவர்களையும்
வீதியால் சைக்கிளில்,
ஓரமாய்
நடந்தும் போகின்றவர்களையும்
மழை நின்றும்
கூடுதலாக நனைத்தது!

வருகிறேன்
அறைகூவல் விடும்
இடிமின்னலும்,
ஈசல்களும் இறக்கையினை
உதிர்த்தும்,
எறும்புகளின் அணிவகுப்பும்,
இரவில் தவளைச் சத்தமும்,
தெரிவித்து விடும்
மழைவரப் போகின்றது!

கழிவு வாய்க்காலையும்
உப்புக் கடலையும்
நல்லதண்ணீர் கிணற்றையும்
பாகுபாடு இன்றி
ஒரே நேரத்தில்
நிரப்பியது!

என்னவளை
நனைக்காமல்
வெட்கப்பட்டு
என்னைமட்டும், நனைத்து
விட்டுப் போனது!

ஒழுக்கு வீடு
கசியும் நிலம்,
நனைந்த விறகு
எரியாத அடுப்பு,
காயாத உடைகள்
போர்த்தின போர்வை,
இங்கே மட்டும்
கூடுதலாக!


-செல்வம்

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXIX - சிவா சின்னப்பொடி

# மோதலாக வெடித்த குழுக்களின் போட்டிகள்...

1990 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை இங்கிருந்து வெளியேறிய பின்பு மாற்று இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் - அவர்களின் ஆதரவாளர்களும் பெருமெடுப்பில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடாவுக்குமபுலம பெயர்ந்து புகலிடம் தேட ஆரம்பித்தனர்.

இவர்கள் புலம்பெயர்ந்த இந்தக் காலகட்டத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் சமூக அமைப்பு வேரூன்ற ஆரம்பித்திருந்ததால் - புலம் பெயர்ந்த மூத்த தலைமுறையினர் பட்ட கஷ்டங்களை இவர்கள் அவ்வளவாகப்படவில்லை.



அநேகமாக இந்தக் காலகட்டத்தில் புலம் பெயர்ந்தவர்களுக்கு - உறவினர்கள் நண்பர்கள் ஊர்க்காரார்கள் என்று நிறையப் பேர் இருந்தார்கள்.

அதேபோல் இவர்கள் புலம் பெயர்ந்து செலவதற்குரிய பணத்தைச் சேர்ப்பதற்கு மூத்த தலைமுறையினர் கஷ்டப்பட்டதைப்போல கஷ்டப்படவில்லை

பெரும்பாலானவர்களுக்கு - புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்த அண்ணாமாரோ அக்காமாரோ, மாமா, மாமிமாரோ அல்லது நண்பர்களோ அங்கிருந்து பணம் அனுப்பிக் கூப்பிட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட பகுதியினர் அவர்களது இயக்கத் தலைமைகள் கொடுத்த பணத்தில் புலம்பெயர்வை மேற்கொண்டார்கள். இந்த இரண்டுமே இல்லாமல் இங்குள்ள பெற்றோர் உறவினர்களின் உதவியுடன் கடன்பட்டு - புலம பெயர்ந்தவர்களும் இருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக 1990 ஆம் ஆண்டுகளிலே நடந்த இவர்களது இந்தப் புலம் பெயர்வு அங்கே புலம்பெயர்ந்த நாடுகளில் பல புதிய பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

அதாவது - பணத்தின் பெறுமதியை - அதை உழைப்பதற்கு அவர்களது உறவினர்கள் பட்ட கஷ்டத்தை உணராத நிலையில்- மேற்குலகுக்குச் சென்ற இவர்களுக்கு தங்குவதற்கு இடமும், மூன்றுவேளை சாப்பாடும் இலவசமாகவே கிடைத்தது.

இதனால் முதல் தலைமுறையினரைப் போல இவர்கள் உடனடியாக வேலை செய்ய வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்படவில்லை.

இவர்கள் நினைத்திருந்தால் இங்கே ஊரில் இடைநடுவில் கைவிட்ட கல்வியை அங்கே தொடர்ந்திருக்க முடியும்.

ஆனால் இவர்கள் இங்கே எப்படி நாட்டுக்கும், வீட்டுக்கும் பிரயோசனமில்லாதவர்களாக இருந்தார்களோ அங்கேயும் அப்படித்தான் இருக்க முற்பட்டார்கள்.

இங்கே எப்படி சில அதிமேதைகள் இவர்களை - தத்துவம், சித்தாந்தம், தோழமை, புலி எதிர்ப்பு என்றெல்லாம் கூறிப் போராட்டப் பாதையிலிருந்து அந்நியப்படுத்தினார்களோ அங்கேயும், முற்கூட்டியே புலம்பெயர்ந்து சென்று வீடு, கார், வங்கியில் பணம் என்று தங்களது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்ட சில அதி புத்திஜீவிகள் ( அதாவது தங்கள் புத்தியைக் கொண்டு சீவிப்பவர்கள்) இவர்களை புலிஎதிர்ப்புக் கோசத்தின் கீழ் ஒன்றிணைக்க முயன்றார்கள்.

தோழமைக் கனவு கலையாத நிலையில் இருந்த சிலர் இவர்களது பசப்புவார்த்தைக்கு எடுபட்டு அவர்கள் பின்னால் சுற்றித்திரிய, இன்னொரு பகுதியினர் சீரழிவுவாதிகளாக மாறி ஊர், பிரதேசம், மற்றும் தனிநபர்களின் பெயர்களில் குழுக்களாகச் செயற்பட ஆரம்பித்தனர்.

இவர்களது முதல் வேலை ஊர்சுற்றுவதாக இருந்தது. காலையில் சாப்பிட்டுவிட்டு வீட்டை விட்டு இறங்கி - நகர்களில், தொடரூந்து நிலைகளில், பேரூந்து நிலையங்கள் எல்லாம் சரியாக இயங்குகின்றதா, எத்தனை பெண்கள் வந்து போகின்றார்கள் என்றெல்லாம் கணக்குப் பார்த்துவிட்டு, மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவார்கள்.

பின்னர், ஒரு இரண்டு மணிக்கு வீட்டை விட்டு வெளியே புறப்பட்டு மறுபடியும் கணக்கெடுப்பு வேலை செய்து விட்டு இரவு 11 அல்லது 12 மணிக்கு வீட்டுக்குச் சென்று நல்ல பிள்ளைகளாக சாப்பிட்டுவிட்டு படுத்து உறங்குவார்கள்.

அக்காவோ, அண்ணாவோ, மாமாவோ, இவர்களை திருத்துவதற்கு எவ்வளவு புத்திமதி சொன்னாலும் அது அவர்களுக்கு ஏறாமல் இருந்தது. இதனால் பல குடும்பங்களுக்குள் இவர்களால் பிரச்சினைகள் எழுந்ததால் பலர், இப்படியான நபர்களை தங்களது குடும்பங்களில் இருந்து கைகழுவிவிட்டார்கள் தொடக்கத்தில் இப்படியான இலவச தங்குமிடமும் சாப்பாடும் கிடைக்கிறது. என்ற நம்பிக்கையில் ஊர் சுற்றித் திரிந்த இவர்களுக்கு நாளடைவில் இப்படியான கைகழுவல்கள் பிரச்சினையாயிருந்தது. தங்குவதற்கான இடமொன்றை தேடுவதங்கும், சாப்பாட்டுக்கும் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தக் கட்டத்தில் ஏற்பட்டது.

ஆனால் உணவு விடுதிகளில் வேலை செய்வது துப்பரவு பணிகள் செய்வது, கடைகளில் சாமான்கள் தூக்கி அடுக்குவது போன்ற கஷ்டமான வேலைகளை இவர்களால் செய்ய முடியவில்லை.

எனவே சுலபமாக பணம் சம்பாதிக்கும் வழி முறைகளை (சட்டதிற்கு புறம்பான செயல்கள்) கண்டறிந்து குறுகிய காலத்தில் பெரும் பணமீட்டி விலை உயர்ந்த புதுக்கார், தினத் தினம் புது உடுப்பு ஆடம்பர வாழ்க்கை என்று தங்களுக்கான உல்லாசமான வாழ்க்கைத் தளத்தை இவர்கள் உருவாக்கினார்கள். இந்த உல்லாசமான பகட்டு வாழ்க்கையை மற்றவர்களுக்கு வெளிச்சம் போடும் இடங்களாக பாரிஸ் நகரத்தில் லாசப்பல், சுவிஸின் பேர்லின்சூரிச் தொடரூந்து நிலையங்கள் ஜேர்மனியில் பிரால்போட் சென், ஸ்ருட்காட், நகரங்களில் தொடரூந்து, பேரூந்து நிலையங்கள் இருந்தன. (தொடரும்)

பொதுத்தேர்தல் 2004 காவலூர் விஜேந்திரன்

# எதிர்வரும் பொதுத்தேர்தலும் வாக்களிப்பின் அவசியமும்

இலங்கையின் 13 ஆவது பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மிகக்குறுகிய காலத்தில் இரு தேர்தல்களை எதிர்கொண்ட மக்கள் இம்முறை மிகநேர்த்தியாக தமது தெரிவுகளை மேற்கொள்வதற்கு தயாராகிவருகின்றனர். ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றப் பொதுத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் எனத் தேர்தல்கள் இடம்பெற்றாலும், வாக்களிக்கும் முறையில் முழுமையான தெளிவற்றவர்களாகவே மக்கள் உள்ளனர்.

ஒவ்வொரு வாக்கும் பெறுமதி வாய்ந்தது மட்டுமல்ல. ஒரு வாக்குக்கூட அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய மிக மிகப்பெறுமதியானது.

ஏதோ வாக்காளர் அட்டை வந்துள்ளது. வாக்களிப்பு நிலையமும் அருகில் தானே என அலட்சியமான முறையில் இருந்து விட்டு தமது வாக்குகளை வீண் விரயம் செய்பவர்களும் எமது பிரதேசங்களில் இல்லாமலில்லை. விரும்பியோ, விரும்பாமலோ கட்சிச் சின்னத்திற்கும் அவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்பது நியதியாகவுள்ளது. இம்முறை இடம்பெறும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் - 24 அரசியற்கட்சிகளும், 200 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இவற்றில் 6000 வேட்பாளர்கள் வரை போட்டியிடுகின்றனர். இவ் 6000 வேட்பாளர்களில் மக்கள் தமது ஆணைமூலம் நாடாளுமன்றம் அனுப்பக்கூடியவர் 225 பேர் மட்டுமே. இதிலும் 26 பேர் தேசிய பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் கட்சிமாற்றங்கள், கட்சிக் கூட்டணிகள், கட்சிக்குரிய சின்னங்கள், கொள்கைகள மாற்றம்செய்தல் என்பன பாரம்பரிய நிகழ்வுகளாக இவை தொடர்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கட்சிகள் தமது வேட்பாளர்களை நிறுத்தி அரசியல் பலப் பரீட்சைக்கு தோற்ற ஆயத்தமாகின்றார்கள். தேர்தல் தேர்வில் அதிகளவு புள்ளிகளைப் பெறுவதற்கு கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் வித்தியாசமான வியூகங்களில் தமது நகர்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இம்முறை 08 அரசியற் கட்சிகளும், 02 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இவை சார்பாக 120 வேட்பாளர்கள் பல்வேறு கொள்கைகளைக் கொண்ட அமைப்புக்களிலிருந்து களமிறங்கியுள்ளனர். மக்களின் ஏகோபித்த ஒரே தெரிவான வேட்பாளர்கள் என்ற சொல்லக் கூடிய ஒரு தெரிவுக்கு இவர்கள் முகம் கொடுக்க உள்ளனர். இம்முறை யாழ்.மாவட்டத்தில்

1) இலங்கை தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்க் கூட்டமைப்பும்
2) ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டு வீணைச்சின்னத்திலும்
3) ஐக்கிய சோசலிசக்கட்சி - ஓட்டோ
4) ஜாதிக ஹெல உறுமய - சங்கு
5) புதிய இடதுசாரி முன்னணி - மேசை
6) றுகுணு மக்கள் கட்சி - கார்
7) முஸ்லிம் காங்கிரஸ் - மரம்
8) சுவராஜ்ய கட்சி - கோப்பை

சுயேட்சைக்குழுக்கள்
1) சுயேட்சைக்குழு - 01 வீ.ஆனந்தசங்கரி - பூட்டு
2) சுயேட்சைக்குழு - 02 முகமட்காலி முகமட்நபி - கூசா

ஆகிய சின்னங்களிலும் போட்டியிடுகின்றன.

ஒவ்வொரு கட்சியும், சுயேட்சைக்குழுவும் 12 வேட்பாளர்களின் பெயர்களை தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். ஆங்கிலமுதல் எழுத்துக்களின் அடிப்படையிலேயே வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படும். இவ்விலக்கங்கள் 1 - 12 வரை இருக்கும். இவ்விலக்கங்களைக் கொண்டே விருப்புவாக்குகளை அளிக்கமுடியும். இதே நேரம் ஒருவர் ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக்குழுவிற்கோ வாக்களித்தால் அவை சார்பான வேட்பாளர்களில் விரும்பிய மூன்று பேருக்கு விருப்பு வாக்கு அளிக்க முடியும். இதேநேரம் நீங்கள் ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக்குழுவுக்கோ அல்லது அவற்றில் ஏதாவது ஒன்றிற்கு வாக்களிப்பீர்களானால் அவை அக்கட்சி பெற்றவாக்காக கணிக்கப்படும். விருப்பு வாக்களிப்பது உங்கள் விருப்பத்தை பொறுத்தது.

ஒருவர் ஒரு கட்சிக்கு வாக்களித்துப் பிறிதொரு கட்சியின் வேட்பாளர்களுககு வாக்களித்தால் பெறுமதியற்ற வாக்குகளாகவே அவை அமையும். இதேநேரம் ஒருவர் ஒரு சின்னத்திற்கும் அதன் வேட்பாளர்கள் நான்குபேருக்கும் வாக்களித்தால், விருப்பு வாக்குகள் செல்லுபடியாகாது. கட்சிக்குமட்டும் வாக்குச்சேரும். இவ்வாறே கட்சிக்கு வாக்களித்து விட்டு இருவருக்கு விருப்புவாக்களித்தால் அவை தகுதியான வாக்குகளாகும். விருப்பு வாக்குகளை மூன்று பேருக்கு அல்லது அதற்குள்ளேயே இடமுடியும் என்பது சட்டரீதியான அறிவுறுத்தல்.

சின்னத்திற்குப் புள்ளியிடும்போது, சின்னத்தைச் சுற்றி நான்கு கோடுகள் இடப்பட்டு ஒரு சதுரததிற்குள்ளேயே சின்னம் இருக்கும். இதற்குப் புள்ளடியிடும்போது, சதுரக் கோடுகளில் இணைக்காது சின்னத்திற்கு மட்டும் சிறிய புள்ளியிடவேண்டும். விருப்புவாக்கிற்கு இவை முக்கியமில்லை. மிக இலகுவாக குறித்த இடத்தவர்கள் அவ்விடத்திலேயே வாக்களிப்பதற்கு ஏற்ற வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கும். இந்நிலையங்கள் காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரையே திறந்திருக்கும்.

'எனன் இன்றைக்கு விடுமுறை தானே கொஞ்சம் இருந்த விட்டு போவம் எப்பவென்றாலும் வாக்குப் போட்டால் சரிதானே' என்றில்லாமல் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி உங்கள் ஒவ்வொருவரிற்குமென 10 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் நேரத்தை நேரத்தோடு பயன்படுத்தி தெளிவான தெரிவினை மேற்கொள்ள ஒவ்வொரு வாக்காளரும் தயாராக வேண்டும். நீதியான தோதல் வாக்களிப்பாக இந்தத் தேர்தல் அமையவேண்டும்.

பொதுவாக வளர்முக நாடுகளில் கூட வாக்களிப்பது எவ்வாறு, விருப்பு வாக்கு, கட்சி வாக்கு என தெளிவான விளக்கங்கள் அற்றவர்ளாகவே மக்கள் உள்ளனர். வாக்களிப்பு முறைகளைச் சரியாக விளங்கிக்கொள்ளாமையால் பெருந்தொகையான வாக்குகள் செல்லுபயற்றதாக அதாவது கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளமுடியாதவாக்குகளாக மாறிவிடும். இவற்றை நினைவில்கொள்ளவேண்டியது வாக்காளர்களது கடமையாகும்.

2001 ஆம் ஆண்டுப் பொதத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 11 கட்சிகள் பெற்ற வாக்குகள்.

| | | |
|---|---|---|
| த.வி.கூ | 102 324 | 54.83 % |
| ஈ.பி.டி.பி | 57 208 | 30.45 % |
| ஐ.தே.க | 16 245 | 8.70 % |
| சிறிலங்கா மு.கா | 3364 | 1.80 % |
| சுயேட்சைக்குழு | 2677 | 1.43 % |
| ஜனநாயகஇடத சாரிமுன்னணி | 2054 | 1.10 % |
| புளொட் | 1454 | 0.77 % |
| ஐக்கிய சோசலிசக்கட்சி | 410 | 0.21 % |
| புதிய இடது சாரி முன்னணி | 407 | 0.21 % |
| ஜே.வி.பி | 242 | 0.12 % |
| சிஹல உறுமய | 213 | 0.11 % |

சென்ற தேர்தலில் மக்கள் தமது ஆணைகளை வழங்கியவற்றை தொகுத்து மீள்பார்வை செய்வது இந்த இடத்தில் மிக பொருத்தமாக அமையும்.

சென்ற தேர்தல் தேர்வில் பெற்ற புள்ளிகளையும், கட்சிகளையும் ஒன்றாகப் பார்க்க முடிகிறது. உங்கள் ஒவ்வொருவரது தீர்ப்புமே ஒட்டுமொத்த தீர்ப்பாக வெளிவரும். இம்முறை தேர்தலையும் நீங்கள் விரும்பும் கட்சிக்கும் அதேபோல் நீங்கள் விரும்புகின்ற வாக்காளர்களுக்கும் புள்ளடியிட்டு உங்கள் விருப்பையும் கட்சிகளது இருப்பையும் உறுதி செய்வது உஙகள ஒவ்வொருவரது கைகளிலேயே தங்கியுள்ளது. உங்கள் வாக்கு உங்களுக்கான, உங்கள் எதிர்கால தலைமுறைகளுக்கான, உங்கள் மண்ணுக்கான விடியலைக்கொண்டுவரும் நெஞ்சுரமும் அர்ப்பணிப்ப சிந்தனையும் கொண்ட கட்சிக்குத்தான் உங்கள்வாக்கு என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். ★

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்ப் பெண்களின் விழிப்பும் எழுச்சியும்...

பெண்கள் தமது ஆற்றல்களையும், ஆளுமைகளையும் மட்டுமல்ல சமூகத்தில், தேசத்தில் தமக்குரிய பொறுப்புக்களையும், அவற்றின்மீதான பற்றுறுதியையும் வெளிப்படுத்தி கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்கவேண்டிய காலகட்டம் இதுவாகும்.

அதுவும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்ப் பெண்கள் கடந்த மூன்று தசாப்த காலமாகவே பல்வேறு வகையான அழுத்தங்கள், அடக்குமுறைகள், சமூக சிக்கல்கள் போன்றவற்றுக்கு உள்ளான நிலையில் அவற்றில் இருந்தெல்லாம் விடுபட்டு எழுந்து விடுதலைப் போராட்ட காலத்தில் வீர வரலாறு படைத்து தமது பன்முக ஆளுமையைத் திசையெங்கும் உணரவைத்து - தம்மை யாரென இனங்காட்டியுள்ள சூழலில் அவர்கள் நேரடியாக அரசியல் அரங்கிலும் தமத கொள்கை மீதான உறுதியான நிலைப்பாட்டையும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் தேசியத் தலைமையை வலுப்படுத்துவதில் உள்ள உறுதிப்பாட்டையும் உணர்த்தவேண்டிய ஒரு களத்தைச் சந்திக்கும் சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டிய காலம் இதுவாகியுள்ளது.

பொதுவாகவே எமது பெண்கள் விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கியதற்கு முன்பான காலகட்டத்தில், அதாவது சுமார் இரு தசாப்த காலத்துக்கு முன்னர் கல்வியறிவு மிக்கவர்களாக இருந்தாலும்கூட பாரம்பரிய மரபுசார் கொள்கைகளுக்கும், சமூகத்தால் அர்த்தமற்று சுமத்தப்பட்ட அறிவியலுக்கு ஒவ்வாத கட்டுப்பெட்டித்தனமான விழிப்புணர்வற்ற சிந்தனைகளுக்கும் ஆட்பட்ட வெறும் பெண்களாகவே பெருமளவு இயங்கிவந்தனர்.

அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் கொண்ட குடும்பச் சிறைக்குள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்டவர்களாகவும், அரசியல் சார்ந்த சிந்தனைகளில் ஆர்வமற்றவர்களாகவும், தங்கள் மீதான சமூகம் சார்ந்த அழுத்தங்களை 'தலைவிதி' என வரையறையிட்டு தலைகுனிந்து ஜீரணித்துக் கொள்பவர்களாகவும், இருந்த பெண்களை, தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஒரு தசாப்த காலத்துக்குள்ளே விழிப்புணர்வு பெற்றவர்களாக விடுதலைப் போராளிகளாக, சமூக சிந்தனை கொண்டவர்களாக, அரசியல் சிந்தனையும் தேடலும் கொண்டவர்களாக மாற்றியது அற்புதமான ஒரு திருப்பமேயாகும்.

ஆணுக்கு பெண் சரிநிகர் சமானமாக மண்மீட்புப் போரில் சாதித்த அர்ப்பணிப்பும், வீரமும், தியாகமும்மிக்க சாதனைகள் தமிழ்ப்பெண்களை உலக சமூகம் வியப்புடன் பார்க்க வைத்தது.

இன்றைய வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் ரீதியிலான இன ஒடுக்குமுறை - மற்றும் இன ஒழிப்பு செயற்பாடுகளும், இனப்பிரச்சினைக்குள்ளான அயலக வல்லாதிக்க மற்றும் மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல்களும்தான் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

எனவே, மேலாதிக்க சக்திகள் அனைத்திற்கும் எதிராக போராட வேண்டிய அவசியம் தமிழினத்திற்கு ஏற்பட்டபோது, தமிழ்ப்பெண்கள் அதில் தமது பொறுப்பினை உணர்ந்து தாமும் களத்தில் இறங்கியதற்கு அவர்கள் தமது தன் தாமும் களத்தில் இறங்கியதற்கு அவர்கள் தமது தன் மானம் மீதும், தமிழினத்தின்மீதும், தேசியத் தலைமையின் மீதும் கொண்ட விசுவாசமான பற்றுறுதியே காரணமாகும்.

அதுதான் அவர்களை வரலாற்றைப் படைக்கவைத்தது.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற வலிமையான சுதந்திர உயிர்ப்பின் வெளிப்பாடே இன்றைய தமிழ்ப் பெண்களின் தனித்துவ அடையாளத்திற்கு காரணமாயிற்று.

'ஆளுமையுள்ள பெண் தனது குடும்பத்தில் மாத்திரமன்றி சமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துபவளாக இருக்கின்றாள். ஒரு சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அந்த மாற்றம் முதல் முதலில் பெண்களில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும்' - என மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழினி அண்மையில் ஒரு விழாவில் குறிப்பிட்டதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இவை அர்த்தமுள்ள வார்த்தைகளேயாகும்.

இன்று மிகவும் நெருக்கடியான ஆனால், தவிர்க்கவே முடியாத அவசியமான தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் தமிழ்மக்கள் தமது வரலாற்றுப் பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

சலுகைகள் வேண்டுமா? சுதந்திரமான வாழ்வு வேண்டுமா? உங்கள் நாடும், வீடும் வேண்டுமா? அரசிடம் கையேந்தி பிச்சையேற்று தருவதாகக் கூறும் தனி நபர்களின் வாக்குறுதிகள் போதுமா? உன்னதமான இலட்சியத்துடன் போராடும் தலைமையை நம்பப் போகிறீர்களா? அல்லது அரசுடன் ஒட்டி உறவாடும் அரசியல் அமைப்புக்களை ஆதரிக்கப் போகிறீர்களா?

இந்தக் கேள்விகளுடன் ஒரு பெண்மணியும் யாழ். மாவட்டத்தில் வேட்பாளராக முன்வந்து வாக்குக் கேட்பது வரலாற்று முக்கியத்துவமான விடயம் தமிழ்ப் பெண்கள் தாம் மட்டுமல்ல தமது குடும்ப உறுப்பினர்களையும் இது குறித்து சிந்திக்க வைக்கவேண்டிய பொறுப்புடையவர்கள் ஆகியுள்ளனர். போர்க்களத்தில் வரலாற்றைப் படைத்தவர்கள், அரசியற் தளத்திலும் பொறுப்புடன் செயற்படுவார்கள் என்பதில் தமிழ்மண் நம்பிக்கையுடன் உள்ளது.

## நாடும் நடப்பும்




# இன்னொரு யுத்தம் வேண்டாம் இதுவே புலிகளின் நிலைப்பாடு

## தென்னாபிரிக்க பிரமுகர் கூறுகிறார்

மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாம் என்பதே புலிகளின் உண்மையான நிலைப்பாடு என்று தென்னாபிரிக்க ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான இப்ராகிம் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து, சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு தெரிவுபடுத்துகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

புலிகளின் உயர்மட்டக் குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, என்னை சந்தித்து உரையாடினர். அப்போது மீண்டும் ஒரு யுத்தத்தில் தாம் ஈடுபடப் போவது இல்லை எனவும், யுத்த நிறுத்தம் அமுலிலுள்ள தற்போதைய காலகட்டத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை விதிகளை முழுமையாக பேணி, நடைமுறைப்படுத்தி வருகின்றோம், வருவோம் எனவும் உறுதியளித்தனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இலங்கையில் அனைத்து அரசியல் கட்சிகளும் குறிப்பாக, இரு பிரதான கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படுவதன்மூலம், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை வெற்றிப் பாதையில் கொண்டுசென்று நிரந்தர தீர்வுகாண்பது சாத்தியமாகும். தென்னிலங்கை புத்திஜீவிகளும் இந்த விடயத்தில் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும்

குழப்பமான சூழ்நிலையே இலங்கையில் இப்போது தொடரந்து நிலவுகின்றது. ஆனால், தேர்தலைத் தொடர்ந்து நாடு வழமைக்கு திரும்பும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

தேர்தலின்பின் நாட்டில் ஸ்திரத்தன்மை ஒன்று ஏற்படும். நாட்டின் நிலமை குறித்து மக்கள் அப்போது அறிந்து கொள்வார்கள். இலங்கையில் முரண்பாடுகளும், பிளவுகளும் இன்று காணப்படுகின்றன. தென்னிலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் வேறுபட்ட நிலைப்பாடு கொண்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கருணாவின் முடிவினால் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. எனவே, இலங்கையில் குழப்பநிலை ஒன்று உருவாகியுள்ளது.

புலிகளின் உள்வீட்டுப் பிணக்கு நோர்வேயின் சமாதான செயற்பாட்டில் நெருக்கடியை சிலவேளை உருவாக்கலாம். இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதான செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிக்க தேக்கநிலை ஒன்று உருவாக்கலாம்.

எவ்வாறாயினும், சமாதான முயற்சியில் நீண்டகாலமாக செயற்பட்ட அனுபவம்நோர்வேக்கு உள்ளது. இலங்கை சமாதான செயற்பாட்டில் நோர்வே திறம்பட செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் அயல் நாடு என்றாலும், இந்தியா சமாதானச் செயற்பாட்டில் ஈடுபடமுடியாது. அவ்வாறாயின் இலங்கையின் அனைத்துத்தரப்பினரும் தமது சம்மதத்தினை தெரிவிக்க வேணடும். தமிழீழ விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் சந்தேகக்கண்கொண்டு நோக்கும் இந்தியா எவ்வாறு இலங்கையின் சமாதானச் செயற்பாட்டில் ஈடுபடமுடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# சர்வதேச அங்கீகாரத்துக்காக தேர்தலைப் பயன்படுத்தவேண்டும்!

## ஜோசப் பரராஜசிங்கம் வேண்டுகோள்

தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக்

தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையான ஆதரவை தெரிவித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவரும், மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான ஜோசப் பரராசிங்கம் தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

எதிர்வரும் எப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் என்பது - தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், தமது உரிமையை வென்றெடுப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பாகும். இது மறுக்கப்படாத ஒரு உண்மை. அனைத்து தமிழர்களும் ஒன்று திரண்டு, ஒருமித்து தமது பங்கை முழுமையாக தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அளிக்கவேண்டும்.

இரண்டு தசாப்த காலமாக நடைபெற்று வந்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்தவர்கள் என்பதை உணர்த்துகின்றது. விடுதலைப் போர் தற்போது யுத்த நிறுத்தம் ஒன்றில் கைச்சாத்திடும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், பேச்சுவார்த்தை ஒன்றைத் தொடர்ந்து தன்னாட்சி

அத்துடன், பேச்சுவார்த்தை ஒன்றைத் தொடர்ந்து தன்னாட்சி அதிகார வரைபை அவர்கள் இலங்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளார்கள். இந்த நிலையில் சமாதானத்தை விரும்பாத சில தீயசக்திகளால் நாடாளுமன்றம்கலைக்கப்பட்டது.

இதனால், சமாதானப் பேச்சுக்களில் தேக்கநிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில், சர்வதேசசமூகம் தேர்தலை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு காண்பிக்கவேண்டும். தமிழர்கள் ஒரு தேசிய இனம் இவர்களுக்கு சுயநிர்ணயம் உண்டு. தமிழர் தாயகக் கோட்பாடு அங்கீகரிக்கப்படவேண்டும். தமிழீழ வீடுதலைப் புலிகளின் தன்னாட்சி வரைவுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் தமீழ் மக்கள் எதிரவரும் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். சுமார் 17 ஆயிரம் மாவீரர்களின் உயிர்களை அர்ப்பணிதது, தமிழ்மக்களுக்கு விடுதலைவேண்டுமென்ற பக்கத்திற்கு சர்வதேச்சமூகத்தைப் பார்க்கவைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். இவர்களை தமிழ் மக்களாகிய நாம் கௌரவிக்க வேண்டும். எனவே, தமிழத் தேசியக் கூட்டமைப்பை ஆதரியுங்கள் என ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவித்தார்.

## அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

# அனுராவின் கருத்துக்கு சந்திரிகா கண்டனம்

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளரா கத்தாமே போட்டியிடவுள்ளதாக அனுரா பண்டாரநாயக்க கூறியிருப்பதானது அர்த்தமற்ற பேச்சு என, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும். இதற்கான அரசியலமைப்பு ஆணைக் குழு ஒன்றினை முன்னணி உருவாக்கும். இதன்மூலம் ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மையுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கமுடியும். மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியை விட, தாம் அதிக ஜனநாயகவாதிகள் என ஜே.வி.பி கூறிவரும் கருத்தை தான் முற்றாக மறுப்பதாகவும், மாறாக ஜே.வி.பி ஒரு திருத்தியமைக்கப்பட்ட கட்சி எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.


சர்வதேச அரசியலில்...

கே.ரீ.கணேசலிங்கம்

# இந்திய - பாகிஸ்தான் உறவைத் தீர்மானிக்கும்

# கிரிக்கெட் அரசியல்

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி முடிந்த வாரத்தின் இறுதி நாளில் தொடங்கியுள்ளது. ஏறக்குறைய 15 வருடங்களுக்குப்பின்னர் நடக்கும் விளையாட்டுப் போராக அமைந்திருக்கின்றது. முதல் ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் விளைவால் பெரும்



வருமானத்தையும் பிரபலங்களையும் இரு நாட்டு விளையாட்டுத்துறைகளும் அடைந்திருக்கின்றன. ஆனால் வெளிப்படையாகப் புரியாமல் அதேநேரம் மறைமுகமாக ஒரு அரசியல் இலாபமும் அவை சார்ந்த நலன்களும் இரு நாட்டு அரசியல் தலைமைகளாலும் பெறமுடிந்திருக்கின்றது. அத்தகைய அரசியல் எதுவென்பதையும், அதனால் இரு நாட்டின் அரசியல் தலைமைகள் அடையும் இலாபம் எதுவென்பதையம் இவ்வாரம் நோக்குவோம்.

கிரிக்கெட் விளையாட்டின் ஆரம்பம் பிரித்தானியாவாக அமைந்த போதும் அதனை ஆரம்பத்தில் **Sun Barthing** என்றே அழைத்தனர். அதாவது குளிர்வலய நாடுகளின் மக்கள் வெயிலில் காய்வதில் ஆர்வமும் தேவையும் உயைவர்களாக இருந்தனர். அதனை வெறுமையாக நின்று காய்வதை விட விளையாடிக் கொண்டு காய்வது நல்லதெனக் கருதினர். அதன் நிமித்தமே இத்தகைய விளையாட்டு ஒன்று ஆரம்பமானது. அது இன்று `வரட்சியுடைய 12 மணித்தியாலமும் சூரியனைத்தரிசிக்கின்ற நாடுகளிலுள்ள மக்கள் விளையாடுகின்ற விளையாட்டாகவும், ரசிக்கும் விளையாட்டாகவும் மாறி விட்டது. இது பாரிய வருமானத்தையும் பிரபலத்தினூடாக அரசியலை நாடும் நிலைக்குமான முதலீடாகவும் மாறிவிட்டது. இத்தகைய விளையாட்டுக்களுக்கு இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் அரசியல் சாயம் பூசுவதில் வல்லவர்களாக உள்ளனர். தற்போதைய சூழலில் இரண்டு நாட்டுக்காரருக்கும் சுமுகமான உறவும் நட்பும் நிலவுகிறதாகவே கருதப்படுகிறது. இரண்டு நாடுகளும் மிக அண்மையில் காணப்பட்ட முரண்பாட்டு நிலைகளைக் கைவிட்டு எதிரும் புதிருமாக இருந்த நிலையை மாற்றியுள்ளன. இத்தகைய திடீர்மாற்றத்திற்கும், கிரிக்கெட் விளையாட்டுக்கும் இடையில் மிக நெருக்கம் உண்டு.

இந்தியத் தேர்தல் களத்தில் உள்ள பிரதான இரண்டு சக்திகளும் சுமுகமான, அமைதியான சூழலை இந்தியாவில் மட்டுமல்ல முழு தென்ஆசியாவிலும் எதிர்பார்க்கின்றனர். இந்தியத்தரப்பைப் பொறுத்தவரை தேர்தல் என்பது ஒன்றாக இருந்தாலும் தேர்தலில் பெறப்படுகின்ற வெற்றி வாய்ப்பே பிரதானமானது. ஒரு சந்தர்ப்பத்தில் வாஜ்பாய் தேர்தலுக்கு முன்பு பாகிஸ்தானுடன் போரை நடத்தி தேர்தலில் வெற்றி பெற்றார். கார்கில் யுத்தத்தை குறிப்பிடலாம். இது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பாடமாகவே அமைந்திருந்தது. தற்போது வாஜ்பாய் அரசு அப்படியான ஒரு போரை நடத்த முடியாது. காரணம் பாகிஸ்தான் பலமான அணுஆயுத அரசாக மட்டுமன்றி அதனைப் பிரயோகிக்கக் கூடிய வலுவுடைய அரசாங்கத்தையும் கொண்டுள்ளது. இதனால் இத்தேர்தலை சமாதானம் என்ற சுலோகத்தினூடாக வெற்றியைப் பெறுவதும், அணுகுவதையுமே இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. அவ்வாறு சமாதான அணுகுமுறை பின்பற்றுவதனால் தேர்தலை சுமுகமாக்குவதுடன் இந்தியாவிலுள்ள இன, மத, சிறுபான்மைகளின் வாக்குகளைக் கவரலாமெனவும் கணக்குப்போடுகின்றது பாரதீய ஜனதாக்கட்சி. ஏற்கனவே, பல தடவை இந்திய - பாகிஸ்தானிய கிரிக்கெட் சபைகளும், வீரர்களும் கோரிக்கை விட்டதற்கும் அனுமதி பெறமுயற்சித்த போதும் இந்துத்தீவிரவாதிகள் மைதானத்தை நாசப்படுத்தியதுடன் பெரும் எதிர்ப்பையும் வெளிப்படுததினர். அப்படியாயின் தற்போது ஏன் மௌனத்தைப் பின்பற்றுகின்றார்கள் என்பது கேள்விக் குறியாகும். இது அவர்களது உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

தேர்தலுக்குப் பாரதீய ஜனதா தயாராக, பாகிஸ்தானுடன் சுமுகமான அணுகுமுறையை ஆரம்பித்துவிட்டது. வாஜ்பாய் கிரிக்கெட் வீரர்களை சந்தித்தமையும் அவர்களைத் தனது பிரதிநிதிகளாக அனுப்புவது போன்ற ஒரு ராஜதந்திர அணுகுமுறையை உலகத்திற்கு காட்டியதும் மேலும் அதனை புரிந்து கொள்ளப் போதுமானது. இதே அணுகுமுறையைக் கொண்டுதான் காங்கிரஸூம் இயங்குகின்றது. கராச்சியில் நடந்த போட்டியில் பிரியங்கா கலந்து கொண்டமை கவனிக்கத்தக்கதாகும். ஆனால் ஆளும் தரப்பு முடிந்தளவுக்கு தங்கள் நலன்களை அடைந்து கொள்ள திட்டமிட்டுள்ளனர். அந்த நிலைமை காங்கிரஸிற்குப் பலமற்றதாக அமைவதுடன் இதனை நிராகரிக்க முடியாத நிலை தென்படுகின்றது.

எனவே, இந்தியாவின் பிரதான நோக்கமாக பாகிஸ்தானுடனான சுமுக உறவுக்கு கிரிக்கெட் விளையாட்டு உந்துதலையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தக் கூடியதாகவே உள்ளது. அதனாலேயே தற்போதைய பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்கும் அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இந்தியத்தரப்பு இவ்வாறு திட்டமிடும் போது பாகிஸ்தான்தரப்பு எப்படி அதனை எதிர்கொள்கிறது என்பதையும் விளங்குதல் அவசியம். பாகிஸ்தானில் தற்போது பின்லேடன் அரசியல் ஒரு பிரபலமானதாகவும், சர்ச்சைமிக்கதாகவும் உள்ளது. அதனால் எழுந்துள்ள பயங்கரவாத நெருக்கடியை பாகிஸ்தான் முறியடிப்பது பாரிய சிக்கலாகவும், பிரச்சினையாகவும் உள்ளது. அதனால் அமெரிக்காவுடனும், ஏனைய மேற்கு நாடுகளுடனும் முரண்படவேண்டிய நிலை ஏற்பட்டுவருகின்றது. இதனால் இத்தகைய நெருக்கடி நிலையை சுமுகமாக தீர்த்துக் கொள்வதற்கு பிரச்சினைக்குரிய இந்திய எல்லை சற்று அமைதியாக இருப்பது இலாபமாக பாகிஸ்தானுக்கு இருக்கின்றது.

முஷாரப்பின் ஆட்சியைப்பற்றிய கருத்துக்கள் மற்றும் எதிர்க்கட்சிகளது விமர்சனங்கள் அமெரிக்காவினுடைய நெருக்குதலால் ஏற்பட்டுள்ள அபாய நிலைகள் இவற்றை கணக்குப்போட்டே முஷாரப்பும் செயற்பட்டு வருகின்றார். அது மட்டுமன்றி முஷாரப்பின் அல்லது இஸ்லாமிய தீவிரவாதத்தின் ஊடுருவல் இந்தியாவின் இராணுவ பாதுகாப்பு அணுகுமுறையால் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய இறுக்கத்தன்மையை பலவீனப்படுத்தவும் இதனை பயன்படுத்தி ஊடுருவலை சாத்தியப்படுத்தவும் பாகிஸ்தான் தரப்பு எண்ணியிருக்கலாம். அதனால் இத்தகைய சமாதானமான அணுகுமுறையும், சூழலும் தேவைப்பாடுடையதாக மாறியிருக்கலாம்.

எனவே, இரண்டுதரப்புமே நலனகளை சாத்தியப்படுத்தும் விதத்தில் ஓர் அணுகுமுறையை தனித்தனியே திட்டமிட்டபோதும் இரண்டும் ஒரே இடத்தில் சந்திப்பதாக மாறிவிட்டது. அதனால் போர் எல்லைகளில் இல்லாது விளையாட்டு மைதானங்களில் நிகழ்த்துவதாக மாறியுள்ளது. கிரிக்கெட் வீரர்கள் போர் வீரர்கள் போல் மைதானத்தில் யுத்தம் புரிகின்றனர்.

அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள் விழா மலர்கள் சஞ்சிகைகள், சுவரொட்டிகள்,
பிரசுரங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள்
மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2225107

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல் பத்து பொதுமக்கள் உடல்சிதறிப் பலி

இஸ்ரேலின் அஷ்டொட் துறைமுகத்தில் நேற்று நடத்தப்பட்ட இரு தற்கொலை குண்டுத் தாக்குதல்களில், 10 பொதுமக்கள் உடல்சிதறிப் பலியானார்கள். அத்துடன் 18 பேர்வரை காயமடைந்துள்ளனர்.

குண்டுத் தாக்குல் நடைபெற்ற பிரதேசத்தில் காணப்பட்ட இரு உடல்கள் தற்கொலைக் குண்டுதாரிகளினுடையதென பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிலரது சிதைந்த உடல்கள் தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து அதிக தூரத்தில் காணப்பட்டது என மீட்புப் பணியாளர் 'மென்டோலா' தெரிவித்தார்.



காஸாப் பிரதேசத்திலிருந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இஸ்ரேலிய பிரதேசத்திற்கு பலஸ்தீனிய குண்டுதாரிகள் செல்லமுடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாதுகாப்பு சுவரைத் தாண்டியே சென்றிருக்கலாமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஈராக்கின் எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்கப் புதிய திட்டங்கள்

## அமெரிக்க நிர்வாகி போல் பிறீமர் தெரிவிப்பு

ஈராக்கில் எல்லைப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளதாக ஈராக்கின் அமெரிக்க நிர்வாகியான 'போல் பிறீமர்' தெரிவித்தார். இந்தத் திட்டத்தில் ஈராக், ஈரான் ஆகிய நாடுகளின் எல்லைகளில் கண்காணிப்பு நிலையங்களை குறைத்து எல்லைக்காவல் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.




2200 மைல்கள் நீளம் கொண்ட இந்த எல்லைப் பிரதேசங்களினூடாக வெளிநாட்டு தீவிரவாதிகள் ஈராக்கில் நுழைந்து தாக்குதல்களை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் ஈரான் எல்லைப் பிரதேசத்தில் 3 நுழைவாயில்களை மாத்திரம் அமைக்க அனுமதிப்பதெனவும் பிறீமர் தீர்மானித்துள்ளார்.

இதன்மூலம் ஈராக்கிற்குள் பிரவேசிப்பவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். அத்துடன், தற்போது எல்லைப் பிரதேசத்தில் கடமையாற்றிவரும் எல்லைப் பொலிஸாரின் எண்ணிக்கையை இருமடங்காக்குவதெனவும் தற்போது 8000 பொலிஸார் கடமையாற்றிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவின் பாதுகாப்பமைச்சர் டுல்லா ஓமர் புற்றுநோயினால் உயிரிழப்பு




ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் ஆட்சிக்காலத்தில் மனித உரிமை சட்டத்தரணியாக பணிபுரிந்தவரும் தற்போதைய பாதுகாப்பு அமைச்சருமான 'டுல்லா ஓமர்' புற்றுநோயினால் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார்.

69 வயதுடைய 'ஓமர்' 1994 ஆம் ஆண்டு பல இனங்கள் கொண்ட ஆட்சியை தென்னாபிரிக்காவில் உருவாக்குவதற்கு அரிய பணிகளை மேற்கொண்டிருந்தார். மேலும் 1994 ஆம் ஆண்டில் பல இனங்கள் கொண்ட ஆட்சியில் நிதி அமைச்சராகவும் பணிபுரிந்தார்.

இந்தக் காலப்பகுதியில், 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டிருந்தார். அந்தக் காலத்தில் மண்டேலாவின் பிரதம பேச்சாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

அத்துடன், நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அவரது அமைச்சரவையிலும் இவர் பாதுகாப்பு அமைச்சராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.






# ஸ்பெயினில் நடந்த தாக்குதல்களுக்கு அல்கொய்டா அமைப்பினரே காரணம்

## அந்த நாட்டு உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

ஒளிநாடாவொன்றில் காணப்பட்ட தகவல்கள் மூலம் ஸ்பெயின் மட்றிட்டில் நடந்த ரயில் குண்டுத்தாக்குதலுக்கு அல் - கொய்டா அமைப் பினரே காரணம் என கருதுவதாக அந்த நாட்டு உள்துறை அமைச்சர் ஏன் ஜெல் சுசெபெஷ் தெரிவித்தார். மட்றிட் தொலைக்காட்சி நிலையமொன்றுக்கு கிடைத்த தகவல் மூலம் இந்த ஒளிநாடா கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.


இதேநேரத்தில் இந்த ஒளிநாடாவில் காணப்படும் தகவல்கள் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை எனவும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அதிகளவான ஸ்பெயின் மக்கள் ஜனநாயகத்திற்கு கிடைத்த பலத்த தாக்குதலாகவே இதனைக் கருதுகின்றனர். இதனால் ஜனநாயகத்தை, தற்போது நடைபெற்றுவரும் தேர்தல்கள் மூலம் பலப்படுத்தவேண்டும் எனக் கருதுவதாக பி.பி.சியின் 'கட்யா சுட்லொ' தெரிவித்தார். இதே நேரத்தில் சனிக்கிழமை இரவில் மக்கள் தெருவில், இந்தக் குண்டு வெடிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டிருந்தவேளையில் இவ் ஒளிநாடாக்கள் கிடைத்திருக்கின்றன.

மேலும் செய்தியாளர் மாநாடொன்றில் ஸ்பெயின் வெளிநாட்டமைச்சர் உரையாற்றும்போது, மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த மூவரும் ஸ்பெயினைச் சேர்ந்த இருவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பாகத் தெரிவித்தார். ரயில் குண்டுத் தாக்குதல்களில் வெடிக்காத குண்டு காணப்பட்ட பையிலிருந்து செல்லிடத் தொலைபேசி ஒன்று கிடைத்ததாகவும் அதன் மூலம் சந்தேகத்துக்கிடமான மொரோக்கோ நாட்டவரை கைது செய்ததாகவும் தெரிவித்தார்.

இதனிடையே குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளிலும் மதவழிபாடுகளிலும் ஆயிரக்கணக்காண மக்கள் கலந்து கொண்டார்கள்.

# ஹெயிட்டியில் ஸ்திர நிலைக்கு அதிகநாட்கள் தேவைப்படுகிறது



## அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவிப்பு



ஹெயிட்டியில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டி ஸ்திர நிலையை ஏற்படுத்த அதிக நாட்கள் தேவைப்படுவதாக அமெரிக்க இராணுவ ஜெனரல் "ரிச்சாட் மையர்" தெரிவித்தார்.

ஹெயிட்டியில் ஜனாதிபதி ஜின் பெட்ரான்ட் அரிஷ்டைட் பதவியிலிருந்து வெளியேறிய பின்னர் அவரது ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களில் இதுவரை கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்கப் படையினரால் இந்த அறுவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவ அதிகாரி "ரிச்சாட் மையர்" தெரிவிக்கையில்-

சமாதானப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும் நோக்கில் ஹெயிட்டியில் செயற்படவில்லை எனவும், அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும்போது திருப்பித் தாக்குவதாகவும், முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டின் ஆதரவாளர்களிடமிருந்து துப்பாக்கிகளை களைவதையும் அமெரிக்கப் படையினர் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் தெரிவித்தார். இதனால் அமெரிக்கப் படையினர் தமது காவல் கடமைகளை பிரதானமான இடங்களிலும் மேற்கொண்டுவருகின்றனர்.

இதனிடையே, ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டின் ஜமேக்காவிற்கான விஜயத்திற்கு தனது எதிர்ப்பினை அந் நாட்டிற்கு தெரிவித்திருந்த ஹெயிட்டியின் புதிய பிரதமர் 'ஜெராட்லட் ரோரு' ஜமேக்காவிற்கு செல்வதற்கும் திட்டமிட்டிருந்தார். ஆனால் அந்த விஜயத்தை நிறுத்தி, தனது புதிய அமைச்சரவையைப் பலப்படுத்த உள்ளதாக பிரதமரின் உதவியாளர் தெரிவித்தார்.



# மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் ரஷ்யாவில் நடைபெறவுள்ளது

ரஷ்யாவில் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்காக 95000 தேர்தல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் 6 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.


தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் தற்போதைய ஜனாதிபதி "விளாடிமிர் புடின்" பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெறுவார் என எதிர்பாக்கப்படுகிறது.

வாக்காளர்கள் தமது வாக்குகளை கண்டிப்பாக உபயோகப்படுத்தவேண்டும் என்ற காரணத்திற்காக வேட்பாளர்களும், மதத்தலைவர்களும் ரஷ்யத் தேசியத் தொலைக்காட்சி மூலம் வாக்களித்தலின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்தி வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக வயது முதிர்ந்தவர்கள் தலைமுடிவெட்டிக் கொள்வதற்காக காசோலைகளையும் இளம் வயதினருக்கு சினிமாப்படம் பார்ப்பதற்கான ரிக்கற்றுக்களையும் இலவசமாக அரசாங்கம் வழங்கிவருவதாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வாக்காளர் கருத்துக் கணிப்பின் மூலம் அதிபர் புடின் எழுபது வீத வாக்குகளை பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானின் அணுசக்தி செயற்பாடுகளுக்கு ஐ.நா.வின் சர்வதேச அணு அமைப்பு தடை



ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈரானின் இரகசியமான அணுசக்தி செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பிரேரணையை நிறைவேற்றியுள்ளது. இதே நேரத்தில் ஈரானிற்கெதிரான தடைகளை ஐக்கிய நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை ஏற்றுக்கொள்வதற்கு சர்வதேச அணுசக்தி அமைப்பு மறுத்திருந்தது.

35 அங்கத்துவ நாடுகளைக் .கொண்ட சர்வதேச அணுசக்தி அமைப்பினால் ஒருவாரமாக மேற்கொண்ட விவாதத்தின் பின்னர் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.


மேலும் இத்தடையுத்தரவு தொடர்பாக கருத்து தெரிவித்த ஈரான், சர்வதேச அணு அமைப்பின் மீது அமெரிக்கா மேற்கொண்ட அழுத்தம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இதே நேரத்தில் சர்வதேச அணுசக்தி அமைப்பின் அமெரிக்கப் பிரதிநிதியான 'கெனித் பிறில்' தெரிவித்த கருத்தில் ஈரான் போதிய ஒத்துழைப்பு வழங்காமையினாலேயே அந்த நாட்டிற்கெதிரான பிரேரணை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் அணுசக்தி அமைப்பின் பரிசோதகர்கள் அடுத்த மாதம் ஈரானுக்கு விஜயம் செய்து பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தனர், ஆனால் அவர்களின் விஜயத்தை பிற்போடுமாறு ஈரான் கேட்டிருந்த பின்னர் இந்தத் தடை நடவடிக்கை அணுசக்தி அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பாக ஈரானின் ஐக்கிய நாடுகளுக்கான தூதுவர் 'பிரூட் கொசெனி' வியன்னாவிலிருந்து தெரிவித்த கருத்தில், அடுத்த வாரம் ஈரானில் ஆரம்பாகவுள்ள புதுவருட தினத்தை முன்னிட்டே அணு அமைப்பின் பரிசோதனைகளில் காலதாமதத்தினை மேற்கொண்டிருந்தாக தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் கனடா, அவுஸ்ரேலியா, அயர்லாந்து ஆகிய நாடுகள் அமெரிக்க அரசின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட கருத்துக்களையே தெரிவித்திருந்தன.



மேலும், அணிசேரா நாடுகள் ஈரானுக்குகெதிராக மென்மையான போக்கினைக் கடைப்பிடித்துள்ளன.

# பாக்தாத்தில் குண்டுவெடிப்பு 4 அமெரிக்கப்படையினர் பலி;

பாக்தாத்தில் நேற்று பாதையோரத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 4 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் இவ்வாரம் நடத்தப்பட்ட பாதையோர குண்டுத்தாக்குதல்களினால் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. "சனி" முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களில் பாதைகளில் காவல் கடமைகளில் ஈடுபடும் போர் வீரர்களுக்கு தெருவோர குண்டுத்தாக்குதல்கள் அதிக சேதத்தை கொடுத்துவருகின்றன.

மேலும் இதுவரை ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 564 ஆக அதிகரித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனநாயக வழி அரசியலில் புலிகள் கூடுதல் வளர்ச்சி!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்வரும் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகள் ஜனநாயக வழியிலான அரசியலில் படிப்படியான வளர்ச்சியைப் பெறுவார்கள்.

இவ்வாறு, கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடந்த வர்த்தக பிரதிநிதிகள் மருத்துவ மற்றும் சட்ட தொழில்களை மேற்கொள்வோருடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்காலத்தில் பரந்தளவிலான கொள்கைகளையுடைய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் அரசியலமைப்பு திருத்தப்பட்டு நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்படவுள்ளது.

புதிய அரசியலமைப்பின்படி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பன உறுதியான முறையில் கடைப்பிடிக்கப்படும். அத்துடன், இந்த புதிய அரசியலமைப்பு குறைந்தளவு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும்.

அத்துடன், புதிய தேர்தல்முறை மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் அதேவேளை நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆட்சிக்காலத்தில் புதிய பொருளாதார ஒழுங்குகள் நல்ல ஆட்சி, சட்டத்துறையின் சிறந்த செயற்பாடுகள் மற்றும் கௌரவமான நாட்டுக்கு சாத்தியப்படக்கூடிய வகையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும்.

அத்துடன் கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு என்பன உரிய முறையில் பேணப்படும் முக்கிய கொள்கைகள் எனவும் தெரிவித்தார்.

எனவே இலங்கையில் வாழும் மக்களினதும், எதிர்கால சந்ததியினரதும் பிரகாசமான எதிர்காலத்துக்கு அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து தமது ஆதரவினை வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தடை செய்த கருவிகள் மூலம் மீன் பிடித்தலுக்குத் தடை!

## மன்னாரில் அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் கடற்பிரதேசத்தில் இன்று முதல், தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித்தலை மேற்கொள்வது தடைசெய்யப்படுவதாக மன்னார் மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜனாப் எம்.கயூம் அறிவித்துள்ளார்.

மின்விளக்கு, சுருக்குவலை, தடை வலை மற்றும் டைனமற் போன்றவற்றைப் பயன்படுத்தியே மீன்பிடித்தல் மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் மன்னார் தீவு முழுவதும் நேற்று ஒலி பெருக்கிகள் மூலம் அறிவிப்புச் செய்யப்பட்டதுடன், தீவுப்பகுதியிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(201)

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுடன் இன்றைய அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் இன்று பி.ப 3 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ச.எழிலன்பன் தெரிவித்தார்.

# 24 மணி நேரத்துக்குள் 33 தேர்தல் வன்முறைகள்

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்திற்குள் 33 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவித்தன.

இந்த முறைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 7 முறைப்பாடுகளையும், ஜே.வி.பி 2 முறைப்பாடுகளையும் செய்துள்ளதாக தேர்தலுக்கான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யபபட்ட தினத்திலிருந்து நேற்றுவரை 426 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பதிவாகியுள்ளன.

இதுவரை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 140 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 112 முறைப்பாடுகளையும், ஜே.வி.பி 49 முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

அதிகளவான 34 வன்முறைச் சம்பவங்கள் அநுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளன.

30 வன்முறைச் சம்பவங்கள் இரத்தினபுரியிலும், 29 வன்முறைகள் அம்பாறையிலும் இடம்பெற்றுள்ளதாக தேர்தலுக்கான பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(01)

### இடம்பெயர்ந்தோர் சொந்த இடம் திரும்ப ஏற்பாடு

(மன்னார்)

கடந்த 14 வருடங்களாக இடம்பெயர்ந்து பேசாலை அகதிமுகாமில் வசித்து வந்த மன்னார் வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த 2 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் கடந்த வெள்ளிக்கிழமை தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

வெள்ளாங்குளம் மூன்றாம் பிட்டியைச் சேர்ந்த இவர்கள் - தமது சொந்த இடம் திரும்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் நகர பிரதேச செயலகம் மேற்கொணடது.

இவர்கள் தமது சொந்த இடம் சென்று மீளக்குடியேற வசதியாக, இந்தக் குடும்பங்களுக்கு உடனடியாகவே மீள்குடியமர்வு கொடுப்பனவுப் பணமாக 25 ஆயிரம் ரூபாவும் ஆறு மாதத்திற்கான நிவாரணமும் வழங்கப்பட்டது. (201)

# ஜெனீவா மாநாட்டில் ரிரோன் பெர்ணான்டோ

(ஜெனீவா)

ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60 ஆவது கூட்டத்தில் கலந்துகொள்ளும் இலங்கை பிரதிநிதிகள் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தலைமை தாங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 18,19 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ உரையாற்றவுள்ளார்.

அத்துடன், ஆயுதக்களைவு தொடர்பாக நடைபெறவுள்ள இந்த வருடத்துக்கான மாநாட்டிலும் அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் கட்சிகளின் துணையின்றி ஆட்சியை அமைக்க முடியாது!

## எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் அரசியற் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு பெரும்பான்மையின அரசியற் கட்சியும் இந்த நாட்டில் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்தார்.

நேற்று ஹற்றனில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெரும்பான்மை இனக் கட்சிகள் அரசாங்கம் ஒன்றை அமைக்கும் போது வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியமைக்கமுடியும் என்பது உறுதியாகிவிட்டது.

நாட்டின் அபிவிருத்தியையும் அரசாங்கம் முன்னெடுக்கத் தயாராகும்போது, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து அவசர தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும் என்பது உறுதியாகிவிட்டது எனவும் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

(01)

### ஜாதிக...

ஹெல உறுமய ஆதரவாளர்கள் அலங்காரப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இவர்கள் மீது தாக்குல் மேற்கொண்டனர்.

பின்னர் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் - தாக்குதல் மேற்கொண்டவர்களில் சிலர் கைதுசெய்யப்பட்ட போதும் சிலர் தப்பிச் சென்றுவிட்டதாக தெரியவருகிறது. பொலிஸார் தொடர்ந்தும் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

### நான்காவது...

படையினரின் தாக்குதல் பயிற்சி ஒத்திகைகள் இடம்பெற்றன. இதில் மோட்டார் சைக்கிள் தாககுதல் அணி, கொமாண்டோ மற்றும் விசேட அதிரடிப்படையணி பரசூட் மூலம் குதித்தல் போன்ற சாகசங்களையும் தமது ஒத்திகையின்போது செய்து காட்டினர்.

### அரச....

வேலைநிறுத்தத்தை கைவிடுமாறும் கோரினார்.

இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த மருத்துவ அதிகாரிகள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

எனினும், இவர்களது சம்பள முரண்பாடுகள் குறித்து நிதி அமைசசர் கே.என்.சொக்ஸி இன்று மீண்டும் மருத்துவ அதிகாரிகளை சநதித்து பேசவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(01)

# எந்தச் சூழலிலும் யுத்த...

திருகோணமலைக்கு வந்தேன். தேர்தல் வெற்றியின் பின்பு சமாதான பேச்சு உருவானது. சமாதான சூழலில் இம்முறை தேர்தலுக்காக திருகோணமலைக்கு மீண்டும் வந்துள்ளேன்.

சமாதானம் தொடர்ந்தும் நிலைக்கும், யுத்தநிறுத்தம் தொடரும். யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டபோது பலருக்கும் ஐயம் இருந்தது. ஆனாலும் இன்றுவரை இது நிலைத்து நிற்கின்றது. இதன் மூலம் சந்தேகம் தீர்ந்து, நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. வடக்கில் ஏ-9 பாதை திறப்பும் நோர்வே அனுசரணையாளர்களின் வருகையும் இதற்கு துணை புரிந்தது.

காலம் கடந்தாவது எமது சமாதான பேச்சுக்கள் நாட்டில் சந்தேகத்தைப் போக்கியுள்ளது. சமாதான பேச்சின் காரணமாக திருமலை அடங்கலாக நாட்டில் சுற்றுலாத்துறை பல வகையிலும் அபிவிருத்தி கண்டுள்ளது. சமாதான பேச்சு மூலமாக இந்நாட்டுக்கு நன்மைகளே அதிகம் கிடைத்துள்ளது.

வெளிநாடுகள் எமக்கு பல கோடிக்கணக்கான நிதிகளை அபிவிருத்திக்காகத் தரத் தயாராக இருக்கின்றன. இன்று சமாதான பேச்சு தடைப்பட்டுள்ளது. இது தொடரும்போது சர்வதேச நிறுவனங்களால் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் வந்துசேரும். அதன் மூலமாக அபிவிருத்திகள் இந்நாட்டில் தொடர்ந்தும் ஏற்படும்.

யுத்தநிறுத்தத்திற்கு எதிராக தெற்கில் போராட்டங்கள் நடக்கின்றன. இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் பிளவுபட்டிருப்பதை சிலர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தப் பார்க்கின்றனர்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரும் திருக்கோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் 13 முகாம்கள் அகற்றப்படாமல் இருக்கின்றது எனக் கோஷமிட்டவர்கள் இன்று மௌனமாகி உள்ளனர். எம்மிடம் இருந்த அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அந்த முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால், அதனை அவர் செய்யவில்லை. கடந்த இரண்டு வருடகாலமாக இந்நாட்டில் துப்பாக்கி வேட்டுக்கள் ஓய்ந்து காணப்படுகின்றது. இது தொடரவும், சமாதான பேச்சுக்கள் தொடரவும் வருகின்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறவேண்டும்.

திருகோணமலையைப் பொறுத்தவரையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியுள்ளது. இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல் மிக முக்கியமான பணியாகும் என்றார். (04)

### வருந்துகின்றோம்

நமது ஈழநாடு பத்திரிகையில் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வெளியான செய்தி எமது வடமராட்சி நிருபருக்கு நீதிமன்றப் பதிவாளருக்கு ஊடாகவே கிடைத்தது. மேற்படி செய்தி காரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி அவர்களுக்கோ அல்லது அவரது மகனுக்கோ ஏற்பட்ட மனவேதனைக்காக நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

# மேலதிகாரி மீது...

பொலிஸார் என நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டிருந்தனர்.

யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு நேற்றுக்காலை 9.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

நேற்றுமதியம்வரை அந்தப் பகுதியில் பொதுமக்கள் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்ததையும் அவதானிக்கமுடிந்தது.

அத்துடன், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சிப்பாயைத் தேடும் பணி நேற்று மாலைவரை படையினரால் மேற்கொள்ளப்பட்ட போதும் அவர்பிடிபடவில்லை. சிப்பாய் அணிந்திருந்த இராணுவச் சீருடை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(தீ)


தமிழ்மக்களின் குரல்
ஒன்றாக ஒலித்திட...
க.சுரேஷ் பிரேமச்சந்திரன்
X
1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(கி-2266)
அச்சுவேலி வாழ் பொதுமக்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.